மலர்-5 இதழ்-105 ஜனவரி 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை
e- magazine




## மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ நந்திக்கு சாபம் கொடுத்த சிவபெருமான்

# பொங்கல் வரலாறு

அற்புத மனிதரின் உன்னத செயல்

# இந்தளவுக்கு ஆத்மார்த்த சேவை செய்யும் இவரின் குடும்பத்தை போற்றுவோம்...

இறைவன் மீது உள்ள ஆத்மார்த்த பக்திக்கு எடுத்துக்காட்டான இந்த படத்தை ஏற்கனவே பார்த்திருப்போம். யார் இவர், எங்கே இருக்கிறார் என்று எண்ணுபவர்கள் கவனத்திற்கு, இவர் பெயர் K.N.கிருஷ்ணா ஐயங்கார், 88 வயது முதியவர்.

சுல்தான்களால் அழிக்கப்பட்ட, கர்நாடகத்தில், ஹம்பி, என்ற இடத்தில் உள்ள "படாவி லிங்கம்" கோயில். கயவர்களின் கோரத்தாண்டவத்தால் கோவில் கோபுரத்தை உடைக்க முடிந்தது, ஆனால் கம்பிரமாக நிற்கும் 9 அடி உயர லிங்கத்தை நெருங்க முடியவில்லை. 450ஆண்டுகளாக பூஜைகள் இல்லாமல் விடப்பட்டிருந்த லிங்கத்திற்கு. 1980ஆண்டு முதல் இவர் தனி மனிதனாக பூஜை செய்துள்ளார்.

காஞ்சி மஹாபெரியவா ஹம்பி சென்ற போது தேவராய வம்சா வழியினரிடம், இவருக்கு ஊதியமும் உணவும் கொடுங்கள், இனி இவர் கோவிலை பராமரிப்பர் என்று கூறி உள்ளார். வருடத்திற்கு இரு முறை மட்டுமே ஊதியம் பெற்று கொண்டு இந்த உன்னத பணியை செய்துள்ளார்.





இதுபோன்ற உன்னத பக்தர்களின் அர்ப்பணிப்பு பணியால்தான் உண்மையான நல்ல பக்தர்களும் நல்ல அதிர்வலைகளுடன் இன்றும் வாழ்ந்துவருகின்றனர். இதுபோன்றவர்களின் குடும்பம் மிகச் சிறந்த சிறப்பு அடைய ஒவ்வொரு பக்தர்களும் ஆத்மார்த்தமாக அவசியம் வேண்டிக் கொள்ள வேண்டும்.

# இந்தளவுக்கு சிறந்த சேவையை செய்யும் அதிகாரிகள் குடும்பமும் இதுபோல ஆகுமா?

இந்து மத நம்பிக்கையைஅழிக்க அரசால் ஏற்பட்ட துறை அறநிலையத் துறையா? என்ற சந்தேகம் தற்போது பக்தர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதற்கு ஒரு உதாரணம் இது. காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை மின் அலுவலகம் அருகே உள்ள சாக் கடை கால்வாயில் இந்த தூண்கள் உள்ளன.



எந்த கோவில் தூண் என்பது தெரியாது, எந்த அதிகாரியின் சிறப்பான சேவை என்பது தெரியாது.

ஒன்றுமட்டும் நிச்சயம் பக்தர்களின் மிகப்பெரிய நம்பிக்கையை சிதைக்கும் அளவிற்கு இந்த செயலை செய்த நபர் கண்டிப்பாக மிகப்பெரிய இழி பிறப்பாகத்தான் இருப்பான்.

மக்களின் நம்பிக்கையை இப்படி கழிவுநீரில் சிதைக்கும் அளவிற்கு செயல்பட்ட அதிகாரியின் குடும்பம் இதைப்போன்றுதான் சிதைந்து போகும் என்று பக்தர்கள் வெளிப் படையாக சபிக்கும் அளவிற்கு உள்ளது. கண்டிப்பாக இந்த செயலை செய்தவர் இந்து மதத்திற்கு எதிராக செயல்படுபவராகத்தான் இருக்கவேண்டும். இதுபோன்றவர்களை களையெடுக்கவில்லையென்றால், இதுபோன்ற இழிச்செயல் செய்யும் அதிகாரிகளின் குடும்பத்திற்கு சாபம்தான் மிஞ்சும்.

தொகுப்பு– ராஜன், போன்: 8825844033

கீழ்த்தரமானவரின் கேவலச் செயல்

# வாஸ்து பகவான் தூங்கும் மாதங்களும் திசைக்கேற்ப வீடு கட்ட உகந்த மாதங்களும்

- கிழக்கு நோக்கிய வீடுகளைக் கட்டும் பணியை ஆடி மற்றும் தை மாதங்களில் செய்ய வேண்டும். மேற்குப் பார்த்த வீடுகள் கட்டும் வேலையை ஆவணி, மாசி மாதங்களில் மட்டுமே செய்ய வேண்டும்.
- வடக்கு நோக்கிய வீடுகளை வைகாசி மற்றும் கார்த்திகை மாதங்களில் கட்டத் துவங்குவது சிறப்பு.
- தெற்குத் திசை பார்த்த வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளை ஐப்பசி, சித்திரை மாதங்களில் துவங்குவது விசேஷ பலன்களைப் பெற்றுத் தரும்.



இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் எட்டு மாதங்கள் தவிர்த்து ஆனி, புரட்டாசி, மார்கழி மற்றும் பங்குனி ஆகிய மாதங்களில் வாஸ்து பகவான் தூங்கிக்கொண்டிருப்பார். அவரை நாம் தொந்தரவு செய்யக்கூடாது.

இவற்றை கோண மாதங்கள் என்பார்கள்.

இந்த மாதங்களில் கட்டடம் கட்டத் துவங்குவதைத் தவிர்க்கவேண்டும். அதேநேரம், இடம் வாங்குவது போன்ற செயல்களில் தாராளமாக ஈடுபடலாம்.

# 2021ம் வருட திருவிழாக்கள்

## ஜனவரி 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 2 | சனி கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| 9 | சனி கிழமை | சப்லா ஏகாதாசி |
| 10 | ஞாயிற்று கிழமை | பிரதோசம் |
| 11 | திங்கள் கிழமை | மாசி சிவராத்திரி |
| 13 | புதன் கிழமை | அமாவாசை |
| 14 | வியாழன் கிழமை | பொங்கல், உத்திரயாணா, மகர சங்கராந்தி |
| 24 | ஞாயிற்று கிழமை | பவுஷா புத்ராடா ஏகாதாசி |
| 26 | செவ்வாய் கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 28 | வியாழன் கிழமை | தைப்பூசம் பூர்ணிமா விரதம் |
| 31 | ஞாயிற்று கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## பிப்ரவரி 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 7 | ஞாயிற்று கிழமை | சட்டில ஏகாதாசி |
| 9 | செவ்வாய் கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 10 | புதன் கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 11 | வியாழன் கிழமை | மகா அம்வாசை |
| 12 | வெள்ளி கிழமை | கும்ப சங்கராந்தி |
| 16 | செவ்வாய் கிழமை | வசந்த பஞ்சமி, சரஸ்வதி பூஜை |
| 23 | செவ்வாய் கிழமை | ஜெய ஏகாதசி |
| 24 | புதன் கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 27 | சனி கிழமை | மகா பூர்ணிமா விரதம் |

## மார்ச் 2021 திருவிழாக்கள்




| | | |
|---|---|---|
| 2 | செவ்வாய் கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| 9 | செவ்வாய் கிழமை | விஜய ஏகாதசி |
| 10 | புதன் கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 11 | வியாழன் கிழமை | மகா சிவராத்திரி, மாசிக் சிவராத்திரி |
| 13 | சனி கிழமை | பால்குன்அம்வாசை |
| 14 | ஞாயிற்று கிழமை | மீன சங்கராந்தி |
| 25 | வியாழன் கிழமை | ஆமாலக்கி ஏகாதசி |
| 26 | வெள்ளி கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 28 | ஞாயிற்று கிழமை | ஹோலிகா தஹன், பால்குன் பூர்ணிமா விரதம் |
| 29 | திங்கள் கிழமை | ஹோலி |
| 31 | புதன் கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## ஏப்ரல் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 7 | புதன் கிழமை | பாபமச்னி ஏகாதசி |
| 9 | வெள்ளி கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 10 | சனி கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 12 | திங்கள் கிழமை | சித்ரா அம்வாசை |
| 13 | செவ்வாய் கிழமை | சித்ரா நவராத்திரி, உகாதி, குடி பத்வா, கடசாத்பனா |
| 14 | புதன் கிழமை | செட்டி சந்த், மேஷ சங்கராந்தி |
| 21 | புதன் கிழமை | ராம் நவமி |
| 22 | வியாழன் கிழமை | சித்ரா நவராத்தி பவுர்ணமி |
| 23 | வெள்ளி கிழமை | கமாடா ஏகாதசி |
| 24 | சனி கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 27 | செவ்வாய் கிழமை | அனுமான் ஜெயந்தி, சித்ரா பூர்ணிமா |
| 30 | வெள்ளி கிழமை | சங்கடஹரசதுர்த்தி |

## மே 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 7 | வெள்ளி கிழமை | வருதிணி ஏகாதசி |
| 8 | சனி கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 9 | ஞாயிற்று கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 11 | செவ்வாய் கிழமை | வைஷாக் அம்வாசை |
| 14 | வெள்ளி கிழமை | அக்ஷய திரிதி, விருஷப சங்கராந்தி |
| 23 | ஞாயிற்று கிழமை | மோகினி ஏகாதசி |
| 24 | திங்கள் கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 26 | புதன் கிழமை | வைஷாக் பூர்ணிமா விரதம் |
| 29 | சனி கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## ஜூன் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 6 | ஞாயிற்று கிழமை | அபரா ஏகாதாசி |
| 7 | திங்கள் கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 8 | செவ்வாய் கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 10 | வியாழன் கிழமை | ஜீஷ்த அம்வாசை |
| 15 | செவ்வாய் கிழமை | மிதுன சங்கராந்தி |
| 21 | திங்கள் கிழமை | நிர்ஜலா ஏகாதசி |
| 22 | செவ்வாய் கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 24 | வியாழன் கிழமை | ஜீஷ்த பூர்ணிமா விரதம் |
| 27 | ஞாயிற்று கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## ஜூலை 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 5 | திங்கள் கிழமை | யோகினி ஏகாதசி |
| 7 | புதன் கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 8 | வியாழன் கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 9 | வெள்ளி கிழமை | ஆஷாத அம்வாசை |
| 12 | திங்கள் கிழமை | ஜகன்னத் ரதயாத்ரா |
| 16 | வெள்ளி கிழமை | கர்கா சங்கராந்தி |
| 20 | செவ்வாய் கிழமை | தேவ் ஷாயானி ஏகாதசி, ஆஷாதி ஏகாதசி |
| 21 | புதன் கிழமை | பிரதோசம் (சுக்) |
| 24 | சனி கிழமை | குரு பூர்ணிமா, ஆஷாத பூர்ணிமா |
| 27 | செவ்வாய் கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## ஆகஸ்ட் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 4 | புதன் கிழமை | கமிகா ஏகாதசி |
| 5 | வியாழன் கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 6 | வெள்ளி கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 8 | ஞாயிற்று கிழமை | சரவண அம்வாசை |
| 11 | புதன் கிழமை | ஹரியாலி தீஜ் |
| 13 | வெள்ளி கிழமை | நாக பஞ்சமி |
| 17 | செவ்வாய் கிழமை | சிம்ம சங்கராந்தி |
| 18 | புதன் கிழமை | சரவண புத்ரத ஏகாதசி |
| 20 | வெள்ளி கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 21 | சனி கிழமை | ஓணம்/ திருவோணம் |
| 22 | ஞாயிற்று கிழமை | ரக்ஷா பந்தன், சரவண பூர்ணிமா விரதம் |
| 25 | புதன் கிழமை | சங்கடஹர சதுர்த்தி கஜரி தீஜ் |
| 30 | திங்கள் கிழமை | கிருஷ்ணா ஜன்மாஷ்டமி |

## செப்டம்பர் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 3 | வெள்ளி கிழமை | அஜா ஏகாதசி |

| | | |
|---|---|---|
| 4 | சனி கிழமை | பிரதோசம் (கிருஷ்) |
| 5 | ஞாயிற்று கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 7 | செவ்வாய் கிழமை | பத்ரபடா அம்வாசை |
| 9 | வியாழன் கிழமை | ஹார்ட்லிகா தீஜ் |
| 10 | வெள்ளி கிழமை | கணேஷ் சதுர்த்தி |
| 17 | வெள்ளி கிழமை | பார்சவ ஏகாதாசி, கன்னி சங்கராந்தி |
| 18 | சனி கிழமை | பிரதோசம் (சுக்ல) |
| 19 | ஞாயிற்று கிழமை | ஆனந்த் சதுர்தாஷி |
| 20 | திங்கள் கிழமை | பத்ரபடா பூர்ணிமா விரதம் |
| 24 | வெள்ளி கிழமை | சங்கடஹர சதுர்த்தி |

## அக்டோபர் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 2 | சனி கிழமை | இந்திர ஏகாதசி |
| 4 | திங்கள் கிழமை | மாசிக் சிவராத்திரி, பிரதோசம் (கிருஷ்) |
| 6 | புதன் கிழமை | அஸ்வின் அம்வாசை |
| 7 | வியாழன் கிழமை | சரத் நவராத்திரி, கடசாத்பனா |
| 11 | திங்கள் கிழமை | கல்பரம்பா |
| 12 | செவ்வாய் கிழமை | நவபாத்ரிகா பூஜை |
| 13 | புதன் கிழமை | துர்கா பூஜை அஷ்டமி பூஜை |
| 14 | வியாழன் கிழமை | துர்கா மஹா நவமி |
| 15 | வெள்ளி கிழமை | துர்கா விசார்ஜன், சரத் நவராத்ரி பவுர்ணமி, தசரா, |
| 16 | சனி கிழமை | பாபன்குஷா ஏகாதசி |
| 17 | ஞாயிற்று கிழமை | பிரதோசம் (சுக்ல), துலா சங்கராந்தி |
| 20 | புதன் கிழமை | அஸ்வின் பூர்ணிமா விரதம் |
| 24 | ஞாயிற்று கிழமை | சங்கடஹர சதுர்த்தி கர்வா சௌத் |

## நவம்பர் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 1 | திங்கள் கிழமை | ராம ஏகாதசி |
| 2 | செவ்வாய் கிழமை | தாந்திராஸ், பிரதோசம் (கிருஷ்) |
| 3 | புதன் கிழமை | மாசிக் சிவராத்திரி |
| 4 | வியாழன் கிழமை | தீபாவளி, கார்திக்அம்வாசை, நரக் சதுர்தாஷி |
| 5 | வெள்ளி கிழமை | கோவர்த்தன் பூஜை |
| 6 | சனி கிழமை | பாய் டூஜ் |
| 10 | புதன் கிழமை | சாத் பூஜை |
| 14 | ஞாயிற்று கிழமை | தேவதான ஏகாதசி |
| 16 | செவ்வாய் கிழமை | பிரதோசம் (சுக்ல), விருச்சிக சங்கராந்தி |
| 19 | வெள்ளி கிழமை | கார்திக் பூர்ணிமா விரதம் |
| 23 | செவ்வாய் கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| 30 | செவ்வாய் கிழமை | உட்பனா ஏகாதசி |

## டிசம்பர் 2021 திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 2 | வியாழன் கிழமை | மாசி சிவராத்திரி, பிரதோசம் (கிருஷ்) |
| 4 | சனி கிழமை | மார்காஷிர்ஷ அமாவாசை |
| 14 | செவ்வாய் கிழமை | மோக்ஷா ஏகாதசி |
| 16 | வியாழன் கிழமை | பிரதோசம் (சுக்ல), தனு சங்கராந்தி |
| 19 | ஞாயிற்று கிழமை | மார்காஷிர்ஷ பூர்ணிமா விரதம் |
| 22 | புதன் கிழமை | சங்கடஹர சதுர்த்தி |
| 30 | வியாழன் கிழமை | சப்லா ஏகாதசி |
| 31 | வெள்ளி கிழமை | பிரதோசம் (கிருஷ்) |





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்

உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட
வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
பெற 9444228203
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com




# திருமணக்கோலத்தில் காட்சி, திருவண்ணாமலைபோன்று அஷ்டலிங்க சிவஸ்தலம், முருகன், விஷ்ணு, பிரம்மா, ஆதிஷேசனுக்கு அருளிய ஈசன்

# திருவேற்காடு வேதபுரிஸ்வர் ஆலயம்

24 மணிநேரமும் திருமணக்கோலத்தில் காட்சி தரும் சிவன்,

திருவண்ணாமலையைப் போன்று சுற்றிலும் அஷ்டலிங்கங்களை கொண்ட சிவன்,

முருகன், விஷ்ணு, பிரம்மா, நான்குவேதங்கள், அகத்தியர், ஆதிஷேசன், மூர்க்கநாயனார், பராச்சார முனிவர் போன்றோருக்கு அருள் புரிந்த ஈசன்.

இவ்வாறு ஒரே கோவிலில் பல்வேறு புராணங்களை ஒருங்கே பெற்றதுதான் திருவேற்காடு வேதபுரிஸ்வர் ஆலயம்.

பாடல்பெற்ற 274 ஸ்தலங்களில் மிக முக்கியஸ் தலமாக இத்தலம் போற்றப்படுகிறது.

இங்குள்ள இறைவனை, வேதபுரீஸ்வரர், வேற்காட்டீசர் என்றும், தாயாரை, பாலாம்பிகை, வேற்கண்ணி அம்மை என்றும் அழைக்கப்படுகிறார்.

இந்த ஸ்தலம் பல்வேறு புராண நிகழ்வுகளும், இறை லீலைகளும் நிரம்பிய ஸ்தலமாக போற்றப்படுகிறது.

தமிழகத்தில் பெரும்பாலான சிவன் கோவில்களில் லிங்க ரூபத்தில் காட்சி தரும் சிவன் இத்திருக்கோவில் மட்டுமே லிங்க ரூபம் மற்றும் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

சிவபெருமானின் திருமணத்தின்போது அனைத்து தேவ, மகரிஷிகளும் கைலாயத்திற்கு சென்றதால் வடபகுதி தாழ்ந்து, தென்பகுதி உயர்ந்துவிடுகிறது. இதை சமன் செய்யும் பொருட்டு அகத்தியரை தென்பகுதி நோக்கி செல்லுமாறு சிவபெருமான் கட்டளையிடுகிறார்.

சிவனின் கட்டளைக்கு உட்பட்டு அகத்தியர் தென்பகுதியில் பயணத்தை துவக்கியபோது, திருவேற்காடு தலத்தில் சிவபெருமானின் திருமணக் கோலத்தை பார்க்க விரும்புகிறார். அகத்தியரின் விருப்பத்தை நிறைவேற்ற சிவபெருமான் தனது திருமணக் கோலத்தில் இத்தலத்தில் காட்சி தந்ததாக புராணங்கள் கூறப்படுகிறது.

இதே போன்று குற்றாலத்திலும் அகத்தியருக்கு சிவபெருமான் திருமணக் கோலத்தில் காட்சி தந்ததாக கூறப்பட்டாலும், திருவேற்காடு தலத்தில் மட்டும்தான், சிவனின் திருமணக் கோலம் தத்ரூபமாக சிலா ரூபத்தில் வடிக்கப்பட்டு வணங்கப்பட்டுவருகிறது.

குற்றாலத்தில் ஐப்பசி பூரத்தன்று திருக்கல்யாண விழா நடக்கிறது. அன்று குற்றாலநாதர், குழல்வாய்மொழி தாயார் இருவரும் அகத்தியர் சன்னதிக்கு அருகில் எழுந்தருளி, அகத்தியருக்கு திருமணக்காட்சி கொடுக்கின்றனர்.

ஆனால் திருவேற்காடு வேதபுரிஸ் வரர் ஆலயத்தில் சிவ பார்வதி திருமணக்கோலத்திலேயே காட்சி தருவது சிறப்பு. திருமண தோஷம், திருமணத்தில் தடங்கள் உள்ளவர்கள் இத்தல இறைவனை வழிபட்டால் தடை நீங்கும்.

திருவேற்காடு பாலாம்பிகையையும், திருவலிதாயம் ஜகதாம்பிகையையும், திருவொற்றியூர் வடிவாம்பிகையையும் ஒரே நாளில் வழிபடுவோர் இம்மையிலும், மறுமையிலும் அனைத்து நலன்களையும் பெறுவர் என கூறப்படுகிறது.

இத்தல தீர்த்தத்தில் ஞாயிறு தோறும் நீராடி வந்தால் தோல் சம்பந்த நோய்கள் தீரும் என்பது நம்பிக்கை.


வில்லுடன் முருகன்


திருமணக்கோலத்தில் ஈசன்



தாயார் சன்னதி கோபுரம்



'வெல்வலம்' மரம் தலவிருட்சம்


சன்னதி நுழைவுவாயில்


தாயார் சன்னதி கோபுரம்

சிவன் ஒரு முறை பார்வதியிடம், இத்தலத்தை மனதால் நினைத்தாலும், ஒரு பொழுதாவது இங்கு தங்கியிருந்தாலும், இத்தலம் வழியாக சென்றாலும் முக்தியடைவர் என்று கூறியுள்ளார்.

திருவண்ணாமலை போன்று இத்தலமும் அஷ்டலிங்க தலமாகும் இந்த அஷ்டலிங்கம் பற்றி முழு விவரத்தை 12–13ம் பக்கங்களில் கொடுத்துள்ளோம்.

இத்திருக்கோவில் விடந்தீண்டாப்பதி என்று அழைக்கப்படுகிறது, திருமால் தன் கையில் இருந்த வலம்புரி சங்கை தவற விட்டார். பின் இத்தல சிவனை வழிபட்டு பெற்றார். திருமால் சுதர்சன சக்கரத்தை பெறுவதற்காக இத்தலத்தை அடைந்து பூஜை செய்த போது, உடனிருந்து ஆதிசேஷனும் இங்கு வழிபட்டு, இத்தலத்தின் எல்லை வரை வாசம் செய்பவர்களை தீண்ட மாட்டேன் என கூறியதாக வரலாறு. அன்றிலிருந்து இத்தலத்தில் யாரும் பாம்பு கடித்து இறந்தது கிடையது. கொடிய விஷம் சம்பந்தப்பட்ட பிரச்சனையில் அவதிப்படுபவர்கள் இத்தலத்து ஈசனை வணங்கினால் விஷத்தன்மையின் வீரியம் குறையும் எனவே இத்தலம் விடந்தீண்டாப்பதி என்றழைக்கப்படுகிறது.

ஜோதிடத்தில் சிறந்த அறிஞராகக் கருதப்படும் பராச்சார முனிவரும் இங்குள்ள இறைவனை வணங்கி அருள் பெற்றுள்ளார், இம்முனிவர் ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் புலமை பெற்றவர். எனவே ஜோதிடம் சொல்வதை தொழிலாகக் கொண்டவர்கள், ஜோதிடம், கணிதம் போன்ற படிப்பை துவங்குபவர்கள் இத்தலத்து ஈசனை வணங்கினால் தங்கள் துறையில் வல்லவராக முடியும்.

விநாயகர், முருகன், திக்பாலகர்கள், திருமல், பிரம்மா, இந்திரன், அகத்தியர், மார்க்கண்டேயர் இங்குள்ள சிவலிங்கத்தை ஆராதித்து வழிபட்டுள்ளனர்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களில் இத்தலத்து பெருமைகளைப் பற்றி பாடியுள்ளார்.

இத்தலத்தில் நான்கு வேதங்களும் மரமாக காட்சி தருவதாக கூறப்படுகிறது. இந்த நான்கு வேதங்களும் இறைவனை வழிபட்டு இத்தலத்தில் 'வெல்வலம்' மரமாகமாறியதாக கூறப்படுகிறது. இன்றும் கம்பீரமாக இந்த மரங்கள் காட்சிதருகிறது, வீடுகளில் யாகம், யோகம் செய்பவர்கள் இந்த மரங்களை வழிபட்டு செல்வது சிறப்பு.

பிரணவ மந்திரத்திற்கு பொருள் தெரியாத பிரம்ம தேவன், அந்தப் பதவியில் இருப்பது நியாயமில்லை என்று கோபமடைந்த முருகன், பிரம்மாவை சிறைபிடித்தார். இதனால்ஏற்பட்ட தோஷம் நீங்க, தனது வேலைப் பயன்படுத்தி வேலாயுதத் தீர்த்தத்தை உருவாக்கி, வேதபுரிஸ்வரர் சன்னதியில் உள்ள சிவபெருமானை வணங்கி தனது தோஷத்தை போக்கிக் கொண்டார்.

அருணகிரி நாதர் இத்தலத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமானை திருப்புகழின் இரண்டு பகுதிகளில் குறிப்பிட்டு பாடியுள்ளார்.

இத்திருக்கோவில் கஜபிருஷ்டம் கர்ப்பக்கிரக அமைப்பை பெற்றது, கேரளாவில் உள்ள பெரும்பாலான கோவில்கள் இந்த கஜபிருஷ்ட அமைப்பிலேயே கோவில்கள் அமைந்திருக்கும்.. கஜபிருஷ்டம் என்பது யானையை பின்பகுதியில் இருந்து பார்த்தால் எப்படி தெரியுமோ அது போன்ற அமைப்பை பெற்றது. இதன் தாத்ரூபம், இத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் சக்தி அபரிமிதமானது என்பதை சூட்சுமமாக சொல்வதாகும்.


கீதா–ராஜன்

கருவறை மேற்குப் பிரகாரத்தில் உள்ள முருகன் சந்நிதியில் முருகனுக்கு முன்னால் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் காணலாம். இத்தகைய அமைப்பை வேறு எங்கும் காண முடியாது. முருகன் ஏற்படுத்திய தீர்த்தம் வேலாயுத தீர்த்தம் என்ற பெயரில் ஆலயத்தின் உள்ளே இருக்கிறது.

இத்தலத்தில் உள்ள நவக்கிரக சந்நிதி பத்ம பீடத்தில் எண்கோண வடிவில் அமைந்துள்ளது சிறப்பிற்குரியது. இத்தலம் நவக்கிரக தோஷங்கள் நீங்குவதற்குரிய ஒரு பரிகாரத் தலமாகும்.

அறுபத்து மூன்று நயன்மாரர்களில் ஒருவரான மூர்கநாயனார் இங்கு பிறந்து வாழ்ந்தார், மூர்கநாயனார் சிவ பக்தர்களுக்கு சூதாட்டத்தின் மூலம் சம்பாதித்த பணத்திற்கு அன்னதானம் செய்துவந்தார். இதனால் தனது சொத்துக்கள் முழுவதும் இழந்தபோதும், அன்னதான சேவையை நிறுத்த மனமில்லாமல், பணத்திற்காக சூதாட்டத்தில் ஈடுபட்டு, பலரை வென்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் அன்னதானத்தை தொடர்ந்தார், ஒரு கட்டத்தில் இவரிடம் தோல்வியடைந்தவர்களிடம் மூர்க்கமாக


மூர்க்க நாயனார்

நடந்துகொண்டு பணம் பெற்று தனது சிவத் தொண்டை தொடர்ந்ததால், இவருக்கு மூர்க்க நாயனார் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த மூர்க்க நாயனாரின் அவதாரத் தலம் வேதபுரிஸ்வரர் தலமாகும். மூர்க்க நாயனாரின் குருபூஜை கார்த்திகை மாதம் மூலம் நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.

இத்தலத்தின் முழு வீடியோவையும் தொகுத்து aanmeegamalar youtubeசேனலில் பதிவிட்டுள்ளோம். வாசகர் பார்த்து லைக் மற்றும் ஷேர் செய்து மற்றவருக்கு பகிரவும்.

– தொகுப்பு கீதா ராஜன்

தொடர்பு எண்: +91–8825844033

ஆன்மிகமலர்


ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ–டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe like & share செய்யுங்கள்
www.aanmeegamalar.com


ஆன்மிகமலர் மெயில் புக்







இந்திர லிங்கம்





அக்கினி லிங்கம்

# அஷ்டலிங்கங்களும் வேதபுரிஸ்வரர் ஆலயமும்






எம லிங்கம்



நிருதி லிங்கம்





வருண லிங்கம்




வாயு லிங்கம்



குபேர லிங்கம்

சிவன் என்றால் மங்களன் என்று பொருள். சிவபெருமானை இக்கலியுகத்தில் லிங்கமூர்த்திகளாக வழிபட்டால் பலபேறுகளை அடையலாம். நம் கண்களுக்குத் தெரியாத பல சிவலிங்கத் திருமேனிகள் தேவ சிற்பியினால் வடிவமைக்கப்பட்டு, ஆங்காங்கே கிடப்பதாக புராணங்கள் சொல்கின்றன.

அந்தவகையில் திருவேற்காடு வேதபுரீஸ்வரர் சந்நிதானத்தைச் சுற்றிலும், அருள் தரும் அஷ்டலிங்கங்களாக, ஒவ்வொரு திக் பாலகரது திருநாமத்தைக் கொண்டு விளங்குகின்றன.

திருவேற்காடு தலத்தை மையமாக வைத்து இந்த லிங்கங்கள் எட்டையும் சுமார் மூன்று மணி நேரத்திற்குள் ஆட்டோ அல்லது கார்களில் சென்று வழிபட்டு வரலாம். ஒவ்வொரு லிங்கமும் தனித்தனியான வாழ்க்கை நலன்களை அருள் பவை என்றாலும் அவற்றை ஒரே நாளில் 18 கி.மீ. எல்லைச் சுற்றுக்குள் தரிசித்து விடுவதே சிறப்பானது. வள்ளிக் கொல்லைமேடு, நூம்பல், செந்நீர் குப்பம், பாரிவாக்கம், மேட்டுப்பாளையம், பருத்திப் பட்டு, சுந்தர சோழபுரம், சின்னக்கோலடி ஆகிய எட்டு இடங்களில் இந்த லிங்கங்கள் அமைந் துள்ளது.

**இந்திர லிங்கம்:**

இவரை வணங்கினால் இனிய வாழ்க்கை தருவார். வேதபுரீஸ்வரர் கோயிலில் இருந்து நேர் கிழக்காக வள்ளிக் கொல்லைமேடு என்ற இடத்தில் இந்திரசேனாபதீஸ்வரர் என்ற திருநாமத்துடன் அருள்கிறார். பதவி உயர்வு, அரசு அனுகூலம் பெற விரும்புபவர்கள் சுத்தமான பசு நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் பலன் கிடைக்கும்.

**அக்கினி லிங்கம்:**

இடர்களை நீக்குபவர், தென்கிழக்கு திசையில் நூம்பல் என்ற தலத்தில் ஆனந்த



புனிதவேல்

வல்லி உடனுறை அகத்தீஸ்வரராக அருள் தரும் இந்த சிவலிங்கத்தை அகத்தியர் தனித்து பூஜை செய்ததாக கூறப்படுகிறது. வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்சனை உள்ள வர்கள் இத்தல இறைவனை வணங்கினால் பலன் கிடைக் கும்.

**எம லிங்கம்:**

எதிர்க்கும் வினைகளை எளிதாக தீர்த்துவைக்கும் லிங்கம். பூந்தமல்லி, ஆவடி சாலையில் தென்திசை லிங்கமாக செந்நீர்குப்பம் என்ற தலத்தில் சிவமூர்த்தங்களோடு கருங்கற்கோயிலில் மரகதாம்பிகை உடனுறை கைலாசநாதர் எனும் திருநாமத்துடன் காட்சி தருகிறார் . ஏழரைச்சனி, கண்டச்சனி போன்றவற்றிற்கு பரிகார தலமாகும்.



ஈசான லிங்கம்

www.aanmeegamalar.com

### நிருதி லிங்கம்:

நிம்மதியான வாழ்வுக்கு அருளுபவர் வேதபுரீஸ்வரர் சந்நதியிலி ருந்து தென்மேற்கு திசையில், பாலாம்பிகை உடனுறை பாலீஸ்வரர் என்ற திருநாமத்துடன் பூந்தமல்லி, பட்டாபிராம் இடையில் பாரிவாக்கத்தில் (மகாநாடு நிறுத்தத்தில்) அருள்புரிகிறார். கடன் பிரச்சனைகளையும், உறவினர்சம்பந்தப்பட்ட பிரச் சனைகளுக்கு தீர்க்கும் சக்தி பெற்றவர்.

### வருண லிங்கம்:

உடல் திறன் கூட்டும், வேதபுரிஸ்வரர் கோயிலி லிருந்து மேற்கு திசையில், மேட்டுப்பாளையம் என்ற இடத்தில் ஜலகண்டீஸ்வரி உடனுறை ஜலகண்டீஸ்வர சுவாமி என்ற திருநாமத்துடன் ஆலயம் இன்றி வெட்டவெளியில் அருள் தருகிறார். பூந்தமல்லி ஆவடி சாலையில் காடுவெட்டி என்ற இடத்தில் உள் ளது. புத்திரப்பேறு, நோய் நீக்கம், விவசாய விருத்தி போன்ற பலன்களை அருளுகிறார்.

### குபேர லிங்கம்:

குறைவிலா செல்வம் அருளும் ஈசன், ஆவடிதிருவேற் காடு சாலையில் வடக்கு திசை லிங்கத் திருமேனியாக சுந்தர சோழபுரம் என்ற தலத்தில் வேம்புநாயகியோடு குபேரபுரீஸ்வரர் ஏகதள விமானக் கருவறையில் அரு ளாட்சி செய்கிறார். பைரவர், வாயு தேவர், துர்க்கை, நவ நாயகர் மற்றும் சத்திய நாராயணருடன் அருள் தருகிறார்.

### வாயு லிங்கம்:

நோயின்றி வாழ வழி காட்டும் ஈசன், வேத புரிஸ்வரர் தலத்திலிருந்து வடமேற்கு திசையில் விருத்தாம்பிகை உடன் வாழவந்த வாயுலிங்க மூர்த்தியாக அருள் தருகிறார். ஆவடி சாலையில் பருத்திப்பட்டு என்ற தலத்தில் கோயில் உள்ளது. இழந்த பொருட்களை மீட்க இத்தல இறைவனுக்கு விளக்கேற்றி வழிபட்டால் பலன் கிடைப்பதாக கூறப்படுகிறது.

### ஈசான லிங்கம்:

எடுத்த செயல்களை வெற்றியுடன் முடிக்க உதவும் சிவன், வேதபுரீஸ்வரர் கோயிலில் இருந்து வடகிழக்கு திசையில் திருவேற்காடு கோலடி சாலையில் சின்னக்கோலடி என்ற இடத்தில் வெட்ட வெளியில், நானேஸ்வரி உடனுறையும் ஈசான சிவன் அருள் தருகிறார். தொண்டை மண்டல கோட்டத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் எப்போதும் ஒரு செயல் வெற்றியாக ஈசனை லிங்க வழிபாடு செய்தபின்பே புறப்பட்டுச் சென்றதாக தலவரலாறு சொல்கிறது. வீடு கட்ட இயலாமை, காரியத் தடை, கண் திருஷ்டி, வண்டி வாகனத்தில் லாபம் போன்றவற்றிற்கு உரிய லிங்கம்.

– புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572



# ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி (எ) தேம்பே ஸ்வாமிகள்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 6

தத்த பக்தர்களான கணேஷ் பட் மற்றும் ரமாபாய் தம்பதியருக்கு கனவினில் தத்த பகவானின் அனுகிரஹத்தால் 13081854 ஆம் ஆண்டு மஹாராஷ்ட்ராவிலுள்ள மங்கோவ் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் இயற்பெயர் "வாசுதேவ்" என்பது.

இவர் ஸ்ரீ தத்தாத்ரேயரின் திருஅவதாரமாக கருதப்படுகிறார். இவர் "தேம்பே ஸ்வாமிகள்" என்றும் அழைக்கப்படுகிறார்.

மிக சிறுவயது முதலே அபார புத்தி கூர்மையுடன் மற்றும் சமஸ்க்ரிதத்தில் வல்லவராகவும் விளங்கினார்.

1875 ஆம் ஆண்டு தனது 21 ஆம் வயதில் பாபாஜிபண்ட் கோடே என்பவரின் மகளான "பயோ" என்பவரை மணந்து பின்னர் "அண்ணபூர்ணா பாய்" என்று பெயரிட்டார்.

ஸ்ரீ குரு சரித்திரம் என்னும் புனித நூலை இவர் சமஸ்க்ரிதத்தில் இயற்றி இன்று பல லக்ஷம் மக்கள் நித்ய பாராயணம் செய்யும் ஓர் ஒப்பற்ற புனித நூலாக விளங்குகிறது மற்றும் 3500 ஸ்லோகங்கள் மற்றும் 64 அத்தியாயங்கள் கொண்ட ஸ்ரீ தத்த புராணம் என்ற நூலையும் படைத்தார்.

1883 ஆம் ஆண்டு மங்கோவ்வில் ஸ்ரீ தத்தாத்ரேயரின் ஆணையின்படி ஆலயம் நிறுவப்பட்டது.

நாடு முழுவதும் சுற்று பயணம் மேற்கொண்டு சனாதன தர்மத்தை பரப்பினார்.

மனைவியின் காலத்திற்கு பிறகு 1891 ஆம் ஆண்டு நாராயணந்த் சரஸ்வதி என்னும் மஹானால் புனித தண்டம் வழங்கி சன்யாச தீக்ஷை அளிக்கப்பட்டது.

ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியினால் புகழ் பெற்ற "நர்ஸோபாவாடி" என்னும் இடத்தில் 12 ஆண்டுகள் ஸ்ரீ தத்தரின் ஆலயத்தின் அருகில் இருந்து மக்களுக்கு அருள் புரிந்தார்.

ஷீர்டி சாய்பாவின் மகிமைகளை கூறும்



புகழ் பெற்ரா நூலான ஸ்ரீ சாய் சத்சரிதத்தில் அத்யாயம் 50 (வீவீ) இவரை பற்றிய முக்கிய தகவல்களை தெரிவிக்கின்றது.

குஜராத்தில் உள்ள கருடேஷ்வர் என்னும் இடத்தில் 1914 ஆம் ஆண்டு ஸ்ரீ தத்தரின் பாதத்தில் இவரின் ஆத்ம கலந்தது.:

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



# மகர சங்கராந்தியின் மஹத்துவம்

இன்று சூர்யோதயத்திலிருந்து சூர்யாஸ்தமனம் வரை அதிக சைதன்யம் நிரம்பியுள்ளதால் இக்காலம் ஸாதனை செய்வதற்கு ஸாதகமாக உள்ளது. மகரசங்கராந்தியிலிருந்து ரதஸப்தமி வரை புண்ய காலமானதால் இக்காலத்தில் அளிக் கப்படும் தானம் அதிக பலனைத் தருகிறது. அத னால் இக்காலத்தில் தர்மப்ரசாரத்தில் ஈடுபடும் ஸன்ஸ்தாக்கள் மற்றும் மஹான்களுக்கு ஸத் பாத்ர தானம் அளிப்பது சிறந்தது.

சங்கராந்தியன்று என்ன பரிசு அளிப்பது? எவர்சில்வர் டப்பா, கிண்ணம் போன்ற மாயை சம்பந்தமான பொருட்களை பரிசளிப்பதற்கு பதில் தார்மீக நூல்கள், ஜபமாலை போன்ற உபாஸ னைக்கு உகந்த பொருட்களை தானமளிக்கலாம்.

பொங்கல் நன்னாள்



உத்தராயண புண்யகாலத் தில் பொங்கல் கொண்டாடப் படுகிறது. அறுவடைத் திரு நாளான தை மாதம் முதல் நாள் புதுநெல்லால் பால் பொங்கல் செய்யப்பட்டு, சூரிய பகவானுக்குப் படைக்கப்படுகிறது. ஸாத்வீக அதிர்வலைகளை எள் அதிகமாக கிரஹிப்பதால் மகர சங்கராந்தியன்று, எள்ளுருண்டை வினியோகிப் பது, சிவன் கோவிலில் எள்ளெண்ணை தீபமேற்று வது, பித்ரு ச்ரார்த்தம் செய்வது போன்றவை செய்யப்படுகின்றன. பொற்றாமரை குளத்தருகே ஹேம மகரிஷிக்கு பகவான் சாரங்கபாணியாக காட்சியளித்த தினம். சிவன் கல்யானைக்கு கரும்பு ஊட்டிய தினம். எழு காளைகளை அடக்கி நப்பின்னையை ஸ்ரீகிருஷ்ணன் கைத்தலம் பற்றிய தினம். இறைவனின் படைப்பிலுள்ள சூரியன், பசுக்கள், எருதுகள், பறவைகள் ஆகியவற்றை பூஜிக்கும் நன்னாள் இது. திருவள்ளுவர் தினத் தை காணும் பொங்கலாக கொண்டாடி அன்று நதிக்கரைகளில் கூட்டாஞ்சோறு உண்ணும் வழக்கம் உள்ளது. 'புதியன புகுதலும் பழையன கழிதலும்' பொங்கலின் சிறப்பம்சம்.

மேலும் விவரங்கலுக்கு
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626



# வாழ்க்கை அனுபவத்தை சொல்லித்தரும் சனிபகவான்

நவகிரகங்களில் சனி கிரகம் பலமான சக்திபெற்ற கிரகம் மட்டுமல்ல, ஒரு ராசியில் அதிக காலம் இரண்டரை வருடம் தங்கிப் பலன் செய்யும் கிரகமுமாகும். அதனால் அவருக்கு மந்தன் என்றும் முடவன் என்றும் பல பெயர்கள் உண்டு.ஒரு ராசியில் இரண்டரை வருடம் என்ற விகிதத்தில் 12 ராசிளையும் (ராசி மண்டலத்தை) ஒருமுறை சுற்றி வருவதற்கு 30 வருடங்கள் ஆகும். அந்த முப்பது ஆண்டுகளில் பொதுவாக மனித வாழ்க்கையிலும், நாட்டிலும், தொழில்துறை என எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்படுவது இயல்பு. அதனால்தான் முப்பது வருடத்துக்குமேல் சேர்ந்தாற்போல் யோகத்திலே திளைத்தவர்களும்இல்லை; கஷ்டத்திலேயே இளைத்தவர்களும் இல்லை என்பார்கள்.

சனீஸ்வரனைப்போல் கொடுப்பவரும் இல்லை கெடுப்பவரும் இல்லை என்பதும் சோதிடப் பழமொழி. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டகச்சனி என்பன சனீஸ்வரனின் சஞ்சாரத்தினால் (கோசரநிலை) ஏற்படுவனவாகும்.

சனி மகா தெசை பிறப்பில் இருந்து கணிக்கப்பெறுவதாகும்.அவரவர் ராசிசக்கரத்தில் (சந்திரன் நிற்கும் இடம் ”ராசி” எனப்படும். அதற்கு) 12ஆம் இடத்தில் சனி வரும்போது ஏழரைச் சனியின் முதல் கட்டம் ஆரம்பமாகின்றது. அங்கு இரண்டரை வருடம் சஞ்சரிக்கும் சனியை “விரயச் சனி” எனவும். அடுத்து ஜென்ம ராசியில் இரண்டரை வருடம் 2ஆம் கட்டமாக சஞ்சரிக்கும் சனியை “ஜென்மச் சனி” என அழைப்பர். அதன் பின் ஜென்ம ராசிக்கு 2ஆமிடத்தில் சனி சஞ்சரிக்கும் இரண்டரை வருட மூன்றாம் கட்டச் சனியை “பாதச் சனி” என்றும் குடும்பச் சனி, வாக்குச் சனி எனவும் அழைப்பர்.

இப்படி மூன்று கட்டமாக வரும் சனியின் மொத்த காலம்தான் ஏழரைச் சனியின் காலம் எனப்படும். ஒருவருடை வாழ்நாளில் சிறு வயதில் வரும் முதல் சுற்றை (7.5 ஆண்டு) “மங்கு சனி” என்றும், வாலிப மற்றும் மத்திம வயதின்போது வரும் இரண்டாம் சுற்றை (7.5 ஆண்டு) “பொங்கு சனி” என்றும், கொஞ்சம் வயதான காலத்தில் வரும் மூன்றாம் சுற்றை (7.5 ஆண்டு) “மாரகச் சனி” அல்லது “மரணச் சனி” என்றும் அழைப்பர்.

இவற்றை விட அவரவர் ராசியில் இருந்து எட்டாவது இராசியில் சனீஸ்வரன் கோசரமாக சஞ்சரிக்கும் இரண்டரை வருட காலம் “அட்டமத்து சனி” என்றும்; ஏழாம் இடத்தில் சஞ்சரிக்கும் இரண்டரை வருட காலத்தை “கண்டச்சனி” என்றும்; நாலாம் ராசியில் சனீஸ்வரன் சஞ்சரிக்கும் இரண்டரை வருட காலம் அர்த்தாஷ்டகச்சனி (அரை அட்டமச் சனி) என்றும் அழைக்கப்பெறும்.இக் காலங்களும் சோதனை, வேதனை மிக்கதாகவே அமையும்பிறந்ததிலிருந்து முப்பது வயதுக்குள் ஏற்படும்.

### ஏழரைச்சனியினால் ஏற்படும் தாக்கம்:

“படிப்பில் கவனம் செலுத்தவில்லை, காதல், கவன சிதறல், உறவினர்கள் மரணம், வேலையில்லா திண்டாட்டம்” என்பதுபோல பலவிதத்தில் பாதிப்புகள் இருக்கும். குழந்தைப் பருவம் முதல் டீன் ஏஜ்வரையிலான இந்த சுற்றில் பெற்றோருக்குள் கருத்து மோதல், பிரிவு, சந்தேகத்தால் சண்டை என்று பிரச்னைகள் வந்து நீங்கும். பன்னிரெண்டு வயதிற்கு மேல் சனிப்பிடித்தால்குழந்தையின் கவனம் சிதறும். சரியான கவனத்தைப் படிப்பில் செலுத்தாது. Drop out from School கேசாகிவிடும். பத்து, ப்ளஸ் டூ வகுப்பில் பெயிலாகும் குழந்தைகளில் பெரும்பாலோனருக்கு ஏழரைச் சனி நடந்து கொண்டிருக்கும்.. சிலருக்கு படிப்பு, மற்றும் வித்தைக்குரிய கிரகமான புதன் ஜாதகத்தில் பலவீனமாக இருந்து அதனால்அவர்கள் தோல்வியுற நேரலாம். அவை விதிவிலக்கு.கணவன் மனைவிக்குள் நேரடியாக எந்தப் பிரச்னையும் இருக்காது. மூன்றாவது நபர் தலையீட்டால்தான் பிரச்னை உருவாகும். குடும்பத்திற்கு வழக்கமில்லாத உணவு வகைகளை குழந்தைகள் எடுத்துக் கொள்வார்கள். மந்தம், மறதி, தூக்கம் என்று இருப்பார்கள்.

ஏழரை சனியில் பெறும் அனுபவங்களும், அவமானங்களும், காயங்களும், வடுக்களும் வாழ்க்கை முழுதும் மறக்காதபடி இருக்கும். ‘‘இரண்டு மார்க் அதிகமாக எடுத்திருந்தால்தலையெழுத்தே மாறியிருக்கும். இன்னும் கொஞ்சம் பொறுப்பா படிச்சுருக்கலாமே’’ என்று ரிசல்ட் வந்தபிறகு புலம்ப வைப்பார். இப்படி வருத்தப்பட வைத்தே வாழ்க்கையை வளர்ப்பார், சனி தர்மதேவன். அதர்மத்தில் திருப்பி விட்டு சோதிப்பார். வலையில் மாட்டாது வெளியேற வேண்டும்.

2வது சுற்று சனியை பொங்கு சனி என்று சொல்வார்கள். அவருடைய வேலையே இது தான். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் இவர் வேலை. திருமணம், குழந்தை பாக்கியம், வீடு, மனை, வாகன வசதிகள் என எல்லாவற்றையும் 2வது சனியாக பொங்கு சனி கொடுப்பார். அதனால் தைரியமாக வாங்கலாம். முப்பது வயதுக்கு மேல் யாருக்கு ஏழரைச் சனி நடந்தாலும் அதற்கு பொங்கு சனி என்று பெயர். பறித்தல், பாதுகாத்தல், பலமடங்காக பெருக்கித் தருதல். இதுதான் இரண்டாவது சுற்றின் கான்செப்ட். உள்ளுக்குள் கிடந்த திறமைகளை பூவானம் போல பொங்க வைக்கும். செல்வத்தை அள்ளிக் கொடுக்கும். ஆனால், கொஞ்சம் கெடுக்கும்.

அதனால், கொடுத்துக் கெடுப்பவர்; கெடுத்து கொடுக்கிறவர் என்ற பெயர் சனிக்கு உண்டு.இந்த இரண்டாவது சுற்றின்போது சிலர், மிதமிஞ்சிய செல்வ வளத்தால் பிரச்னைகளை உருவாக்குவார்கள்.‘‘நான் யார் தெரியுமா?’’ என்று செல்வாக்கை நிரூபிக்கத் துணிவார்கள். தான்தான் பெரிய ஆள் என்று தன்னடக்கமற்ற மனோநிலையில் திரிவார்கள். அப்படி மாறிய அடுத்த நிமிடமே, ஆட்டம் காண வைக்கும் முயற்சியில் இறங்குவார் சனி. பழைய நிலைக்கே கொண்டு செல்லத் திட்டமிடுவார். ஆகவே, கவனமாக இருங்கள். பேச்சிலோ, செயலிலோ கர்வக் கொம்பு முளைத்தால் கொடுத்ததைப் பிடுங்க தயங்க மாட்டார். சனி பகவான் வந்தால் தான் நம் அறிவுக்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட பல விஷயங்கள் இருக்கின்றன என்பதை உணர்வோம்.

வசதி வரும்போது எதையும் தலையில் ஏற்றிக் கொள்ளாமல் கூழ் கிடைத்தாலும்குடியுங்கள். இந்த இரண்டாவது சுற்றில்தான் வியாபாரம் விருத்தியாகும். அதனால் தைரியமாக தொழில் தொடங்கலாம். ‘‘ரெண்டாவது ரவுண்டுல ரெட்டிப்பு வருமானம்’’ என்றொரு வாக்கியம் உள்ளது. ஆனால் பாதை மாறினால், அதலபாதாளம்தான். அதேசமயம் நம்பிக்கை துரோகம் செய்தவர்களை பார்த்து துடிக்காதீர்கள். டென்ஷன் ஆகாதீர்கள். ஆரோக்கியம் பாதிக்கும். ஏழரை சனியில் யார் உங்கள் காசைசாப்பிட்டாலும், அது ஏற்கனவே நீங்கள் பட்ட கடன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். சனிதிசை நடக்கும்போது கண்டிப்பாக திருநள்ளாறு தலத்திலும், திரு வாரூர் திருத்துறைப்பூண்டி பாதையிலுள்ள திருக்கொள்ளிக்காடு தலத்திலும் வீற்றிருக்கும் சனிபகவானை தரிசித்து வந்தால் பல பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு நெய் தீபம் ஏற்றி தொல்லைகளில் இருந்து விடுவிக்கும் படிமனமுருகவேண்டி வழிபடலாம். சனி பகவானை


ஆன்மிகமலர் மெயில் புக்

# பரமஹம்ஸ யோகானந்தரின் அவதாரம் தினம் ஜனவரி-5

“மனித இனம் தனக்கு முழுமையானதும் முடிவற்றதுமான மகிழ்ச்சியை கொண்டுவரும் என நான் நம்புகின்ற அந்த வேறு ஏதோ ஒன்றை நாடி நிரந்தரத் தேடலில் ஈடுபட்டிருக்கிறது. இறைவனை நாடி கண்டுகொண்டுவிட்ட அந்தத் தனி ஆத்மாக்களுக்கு தேடல் முற்றுப்பெற்றுவிட்டது. இறைவன்தான் அந்த வேறு ஏதோ ஒன்று”

– ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர்.




## பரமஹம்ஸ யோகானந்தரின் அவதாரம்

பாரதம் பெரிய மகான்கள் மற்றும் சிறந்த யோகிகளின் நாடு. பெரிய மகான்கள் பலர். அவர்களில் ஒருவர்தான் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். இவர், மகிமைக்குரியவர்களாகிய தாய் ‘ஞானபிரபா கோஷ்’க்கும் தந்தை ‘பகவதி சரண் கோஷ்’ க்கும் மகனாக இந்தியாவில் இமய மலைக்கு அருகிலுள்ள கோரக்பூரில் 1893ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் தேதி பூமியில் அவதரித்தார்.

இவருடன் பிறந்தவர்கள் ஏழுபேர்கள். இவருடைய தாய் தந்தையர் மகாவதார பாபாஜியின் பிரதான சீடரான லாஹிரி மகாசயரின் சிஷ்யர்களாவர். இவரைப்பற்றிய உன்னதமானதும் மேன்மையுடையதுமான விவரங்கள் இவரால் எழுதப்பட்ட ‘ஒரு யோகியின் சுயசரிதம்’ என்ற நூலைப் படித்தாலே தெரிந்துகொள்ளலாம்.

அந்த நூல் ஒரு மகத்துவமுடைய நூலாகும். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் மகாவதார பாபாஜியின் வம்ச பரம்பரையில் வந்தவராவார்.

## குருதேவரைப்பற்றி...

இம்முறை குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தருடைய அவதாரம் மேன்மையான மற்றும் மகிமைக்குரியது என்பதை எடுத்துரைக்க வேண்டும் என்பது என் கடமையாக உள்ளது. அது மிகவும் அவசியமும் கூட. அதை எழுதுவதற்கு என் குருதேவர் எனக்கு அனுமதி அளித்துள்ளார் என்றுதான் கூற வேண்டும். அதற்கிணங்க அவருடைய முதன்மை சிஷ்யையும் யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா/ ஸெல்ஃப்ரிய லைசேஷன் ஃபெலோஷிப்ன் முன்னாள் சங்கமாதா மற்றும் தலைவியாக இருந்த தயாமாதா 1975–ஆம் ஆண்டு மே மாதத்தில் குருதேவருடைய மகிமைகளை எழுதியுள்ளதைக் குறிப்பிட விழைகின்றேன்.

தயா மாதாஜி கூறுகிறார்: “முதன் முறையாக நான் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரைக் கண்டபொழுது அவர் சால்ட் லேக் சிட்டியில் ஒரு மிகப்பெரிய ஆனந்தப் பரவசமூட்டப்பட்ட சபையோரின் முன்பு உரையாற்றிக் கொண்டிருந்தார். அது 1931 ஆம் ஆண்டு கூட்டம் நிறைந்த அரங்கத்தின்பின் நான் நின்று கொண்டிருந்தபோது, உரையாற்றுபவரையும் அவருடைய வார்த்தைகளையும் தவிர என்னைச் சுற்றிலுமிருந்த எதைப்பற்றியும் உணராமல்



நான் நிலைகுத்தி நின்று விட்டேன். என் ஆன்மாவினுள் பொழிந்துகொண்டு என் இதயத்தையும் மனதையும் வெள்ளமென நிறைந்துக்கொண்டிருந்த ஞானத்திலும் இறை அன்பிலும் முழு இருப்பும் லயித்திருந்தது. எப்பொழுதும் நான் இறைவனை நேசிக்க ஏங்கியிருந்ததைப்போலவே இந்த மனிதர் அவனை நேசிக்கிறார். அவர் இறைவனை அறிந்துள்ளார். அவரையே நான் பின்பற்றுவேன்,” என்று மட்டுமே நான் எண்ண முடிந்தது. மேலும், அக்கணத்திலிருந்து நான் அங்ஙனமே செய்தேன்.”

மேலும் மாதாஜி கூறுகிறார்: “பரமஹம்ஸருடன் நான் இருந்த ஆரம்ப நாட்களில், என் சொந்த வாழ்க்கையில் அவருடைய சொற்களின் உருமாற்றக்கூடிய சக்தியை உணர்ந்ததும் எல்லா உலகிற்கும் எல்லா காலத்திற்குமாக அவருடைய சொற்களைப் பாதுகாக்க வேண்டிய அவசரமான தேவையைப்பற்றிய உணர்வு எனக்குள் எழுந்தது. நான் பரமஹம்ஸ யோகானந்தருடன் இருந்த பல ஆண்டுகளில் அவருடைய விரிவுரைகளையும் வகுப்புகளையும் அத்துடன் கூட அநேக சாதாரண உரையாடல்கள் மற்றும் தனிப்பட்ட அறிவுரைகளையும் உண்மையிலேயே, அற்புதமான அறிவும், இறை அன்பும்கொண்ட ஒரு மிகப்பரந்த பொக்கிஷ இல்லமாகத் திகழ்வது பதிவு செய்து வைப்பது என் புனிதமான மற்றும் ஆனந்தமான தனிச்சலுகையாக அமைந்தது. குருதேவர் பேசும் பொழுது அவருடைய உள்ளெழுச்சியின் உந்துதல் அவரது பேச்சின் வேகத்தில் பெரும்பாலும் பிரதிபலித்தது. அவர் எப்பொழுதாவது பல நிமிடங்கள் நிறுத்தாமல் பேசுவார். மேலும் ஒரு மணிநேரம் வரையும் தொடர்ந்து பேசுவார். அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்போர் , தம் வசமிழந்து அமர்ந்திருக்கும், அதே சமயம் என் பேனாவோ பறந்துகொண்டிருக்கும்! அவரது சொற்களை நான் சுருக்கெழுத்தில் எழுதிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு விசேஷ தெய்வீக அருள் கீழிறங்கி, குருவின் குரலை சுருக்கெழுத்து வடிவங்களில் உடனுக்குடன் மாற்றி தாளில் பதிய வைத்துக்கொண்டிருப்பது போலிருக்கும். அவற்றை விரிவுபடுத்தி எழுதுவது ஆசீர்வதிக்கப்பட்ட பணியாக இன்னும் தொடர்கிறது. இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகும் என்னுடைய சில குறிப்புகள் நாற்பது வருடங்களுக்கும் மேலாக பழமையானவை அவற்றை விரிவுபடுத்தி எழுத ஆரம்பிக்கும்பொழுது, அவை நேற்று பதிவு செய்யப்பட்டவைபோல் என் மனதில் அதிசயமான முறையில் புதியதாக உள்ளன. ஒவ்வொரு குறிப்பிட்ட சொற்தொடரிலும் குருதேவரின் குரலின் ஏற்ற இறக்கங்களைக் கூட நான் உள் முகமாகக் கேட்கின்றேன்.”

அவர் (மாதாஜி) தொடர்கிறார்: “குருதேவர் தன் சொற்பொழிவுகளுக்கு மிகச்

97
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குறைந்த அளவு ஆயத்தமேனும் செய்வது அரிது; அப்படியே எதுவும் தயார், செய்தாலும், அது அவசரமாகக் குறித்துக்கொள்ளப்பட்ட உண்மையை அடிப்படையாகக் கொண்ட ஓரிரண்டு விவரங்களையே கொண்டிருக்கும். பெரும்பாலும் காரில் ஆலயத்திற்குச் தியான ஆலயம் சென்று கொண்டிருக்கும்பொழுது, வழியில் அவர் சாவகாசமாக எங்களில் ஒருவரிடம் கேட்பார் : “இன்றைக்கு நான் பேச வேண்டிய விஷயம் என்ன ? “ தனது மனதை அதில் இருத்தி, தெய்வீக அருள் கிளர்ச்சியின் அகக்களஞ்சியத்திலிருந்து முன்னேற்பாடில்லாத சொற்பொழிவை அவர் ஆற்றுவார்.”

“ஆலயங்களில் குருதேவருடைய சொற்பொழிவுக்கான விஷயங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டன. ஆனால் சில சமயங்களில் அவர் பேசத் தொடங்கும்பொழுது அவருடைய மனம் முழுவதுமாக வேறு எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். “இன்றைய விஷயம்” என்பதைப் பொருட்படுத்தாமல், அந்தக் கணத்தில் தன் உணர்வுநிலையைத் தன்வயப் படுத்தி, தன் அபரிமிதமான சொந்த ஆன்மீக அனுபவங்களிலிருந்தும் உள்ளுணர்வுக் காட்சிகளிலிருந்தும், ஒரு நிலையான ஊற்றாக விலைமதிப்பற்ற ஞானத்தைப் பொழிந்து உண்மைகளை உரைப்பார். ஏறகுறைய எப்பொழுதும் இத்தகைய ஒரு சொற்பொழிவின் முடிவில், பலர் தங்களுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்த பிரச்சனைகளைப்பற்றி தெளிவுப்படுத்தியதற் காகவோ அல்லது ஒருக்கால் தாங்கள் தனிப்பட்ட முறையில் ஆர்வம் கொண்டிருந்த சில தத்துவரீதியான கருத்துக்களுக்கு விளக்கம் அளித்ததற்காகவோ அவருக்கு நன்றி கூற முன்வருவர்.”

“சில சமயங்களில் குருதேவர் சொற்பொழி வாற்றிக் கொண்டிருக்கும்பொழுது, அவருடைய உணர்வுநிலை, சபையினரை சில கணங்களுக்கு மறந்து இறைவனுடன் நேரடியாக உரையாடும் அளவிற்கு உயர்ந்து விடும்; அவருடைய முழு இருப்பும் இறை ஆனந்தத்தாலும் மதிமயக்கும் அன்பினாலும் நிறைந்து வழிந்தோடும். இவ்விதமான உயர்ந்த உணர்வு நிலைகளில் அவருடைய மனம் இறை உணர்வுடன் முழுவதும் ஒன்றாகி, தன் அகத்தினுள் சத்தியத்தைக் கண்டுணர்ந்தார், அத்துடன் தான் கண்டதையும் விவரித்தார். சில வேளைகளில் இறைவன் பராசக்தியாகவும் அல்லது வேறொரு அம்சமாகவும் அவருக்குக் காட்சி அளித்தான்; அல்லது நம் மகா குருமார்களில் ஒருவரோ அல்லது மற்ற மகான்களோ தெய்வீகக் காட்சியில் அவர் முன்பு தோன்றினர். இத்தகைய சமயங்களில், சபையோரும் கூட, அங்கிருந்த அனைவரின் மீதும் பொழியப்பட்ட விசேஷமான அருளாசியை ஆழமாக உணர்வர். குருதேவர் ஆழ்ந்து நேசித்த பெரிய மகான்கள் இவ்விதமான ஒரு தெய்வீகத் தோற்றமளித்தபொழுது குருதேவர், “இறைவா! இறைவா! இறைவா! “என்னும் அழகான கவிதையைப் புனைவதற்கு மனவெழுச்சியூட்டப்பட்டார்.”


குருப்ரியா

மேலும் மாதாஜி தொடர்கிறார்: “பகவத் கீதை. ஞான ஒளி பெற்ற ஒரு மகானை இவ்வார்த்தைகளில் விவரிக்கிறது. “ஞானத்தால் ஆஞ்ஞானத்தை அகற்றியவர்களிடத்தில், பரம்பொருள் சூரியனைப்போல் பிரகாசிக்கின்றது.” (அத்தியாயம் 5 ஸ்லோகம் 16)

ஒவ்வொருவரையும் உடனடியாக சகஜமான நிலையில் இருக்கவைத்த பரமஹம்ஸ யோகானந்தருடைய அன்பும், இயல்பான சுபாவமும் மற்றும் அமைதியான அடக்கமும் மட்டும் இல்லாமலிருந்திருந்தால், அவருடைய ஆன்மீகப் பிரகாசத்தைக் கண்டு, ஒருவர் பக்திகலந்த பயத்தைப் பெற்றிருக்க நேர்ந்திருக்கும். சபையிலிருந்த ஒவ்வொரு மனிதனும், குருதேவருடைய உரை தனக்கென தனிப்பட்ட முறையில் ஆற்றப்பட்டதாக உணர்ந்தனர். குருவினுடைய அன்பூட்டும் குணநலன்களில் அவருடைய புரிந்துகொள்ளும் நகைச்சுவை உணர்வு கொஞ்சமும் குறைந்ததல்ல. ஏதோ ஒரு தேர்ந்தெடுத்த சொற்றொடர், சைகை அல்லது முகபாவனை மூலமாக, ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளச் செய்வதற்காகவோ அல்லது குறிப்பிடும்படியான ஓர் ஆழ்ந்த விஷயத்தைப்பற்றி தான் கூறுவதை நீண்ட நேரம் ஒருமுகப்பாட்டுடன் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் மனதைத் தளர்த்துவதற்காகவோ, மிகச் சரியான சமயத்தில் பாராட்டும் விதமான மனமார்ந்த சிரிப்பை சபையோரிடமிருந்து வெளிக்கொணர்வார்.



“ஒப்புயர்வற்ற மற்றும் எல்லோருக்கும் பொதுவான பரமஹம்ஸ யோகானந்தருடைய தெள்ளத் தெளிவான, அன்பான தனித்துவத்தை ஒருவர், ஒரு புத்தகத்தின் பக்கங்களில் தெரிவிக்க இயலாது. ஆனாலும் இந்த சுருக்க மான பின்னணியை அளிப்பதில் என் பணிவான நம்பிக்கை என்னவென்றால் இந்தப்புத்தகத்தில் அளிக்கப்பட்டுள்ள உரைகளை வாசிப்பவரின் மகிழ்ச்சியையும் பாராட்டலையும் அதிகமாக்கும்படியான ஒரு தனிப்பட்ட கணநேரக்காட்சியைக் கொடுக்க வேண்டும் என்பதாகும்” என்கிறார் தயா மாதாஜி

“என் குருதேவர் இறைத் தொடர்வில் இருந்ததைக் கண்டிருக்கவும் அவருடைய ஆன்மாவின் ஆழ்ந்த உண்மைகளையும் பக்திமயமான பொழிவுகளையும் செவிமடுத்திருக்கவும் அவற்றை யுகயுகங்களுக்காக பதிவுசெய்திருக்கவும் மேலும் இப்பொழுது அவற்றை அனைவருடன் பகிர்ந்துகொள்ளவும்ஞ்ஞ்ஞ்.. என்னே என் ஆனந்தம்! குருதேவரின் உன்னதமான சொற்கள், இறைவனுடன் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், நம் அன்புடைய பெரும் தந்தை, பேரன்னை மற்றும் நிரந்தர நண்பனுமான அந்தப் பரம்பொருளுக்கான ஆழ்ந்த அன்பிற்கும் நம்மை அழைத்துச் செல்லும் கதவுகளை அகலமாகத் திறந்து விடட்டும்! ” என்று பக்திரசம் நிறைந்த விசால இதயத்துடன் மாதாஜி கூறியுள்ளார்.

குருதேவரைப்பற்றி ஸ்ரீ ஸ்ரீ தயா மாதாஜி கூறியுள்ள சொற்களை மக்கள் படிக்கும்படியாக மீண்டும் ஒரு முறை எழுதுவதற்கு என்னையும் குருதேவர் ஒரு கருவியாக்கிக்கொண்டுள்ளார் என்பதை நினைக்கும்பொழுது என்னுள் அடக்க முடியாத ஆனந்தம் பெருக்கெடுத்து ஓடுவதை என்னால் உணர முடிகிறது.

இக்காலகட்டத்தில் வாழும் மனிதர்கள் மற்றும் எதிர்கால சந்ததிகளின் நன்மைக்காக இறைவனை அடைவதற்காக வும் அல்லது இறை அனுபூதி பெறுவதற்காகவும் அனைத்து சீடர்கள் மற்றம் வாசகர்கள் சார்பிலும் முறையாக ஸ்ரீ ஸ்ரீ மகாவதார பாபாஜி. ஸ்ரீ ஸ்ரீ லாஹிரிமசாசயர் மற்றும் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி மூலமாக கிரியா யோகத்தை அருளி வழங்கிய அன்பிற்குரிய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர்க்கு என் சார்பிலும் இதயபூர்வமான நன்றியையும் நமஸ்காரத்தையும் பணிவுடன் சமர்ப்பிகின்றேன். எங்களை ஆசீர்வதிக்குமாறு பணிவன்புடன் வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909


ஆன்மிகமலர் மெயில் புக்


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்





# அகத்தியர் பிரதிஷ்டை செய்த மணமை சிவன் கோவில்

செங்கல்பட்டு மாவட்டம். திருக்கழுக்குன்றம் வட்டத்தில் மணமை என்கின்ற ஊர் உள்ளது. நல்ல மண் வளமும் நீர் வளமும் நிறைந்த ஊரே மணமை என்று ஊரின் பெயர் அமையப்பெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் மணமை கிராமம் அமைந்துள்ளது. மணமை மதுரா லிங்கமேடு என்று குறிப்பிடப்படுகின்றது.

மணமை பேரூந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரம் உள்ளே செல்ல வேண்டும். திருக்கழுக்குன்றம் வழியாக வந்தால் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. மணம் வீசும் மலர்கள் நிறைந்தபசுமை பசுஞ்சோலைகளும். வயல்களும். மரம். செடி கொடிகளும் இருந்தமையால் அகத்தியர் பெருமான இங்கு தவமியற்ற ஏற்ற இடமாக தேர்வு செய்து இவ்வூரில் சிவபெருமானுக்கு திருக்கோயில் அமைத்து தம்மால் உருவாக்கப்பட்ட சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்தார்.

மேலும் அம்பிகைக்கு தனி சந்நிதி அமைத்து மணோன்மணி அம்பிகை என்ற பெயரில் சிலையை பிரதிஷ்டை செய்தார். அகத்தியரின் மனதில் அம்பிகை உருவெடுத்ததால் மணோன்மணி என்ற பெயர் வரலாயிற்று.எவருக்கும் தெரியாமல் சிவலிங்கம். அம்பிகை நந்தி போன்ற மூர்த்தங்கள் மரம் செடி கொடிகள். புற்றுமண் போன்றவற்றால் மூடி 120 ஆண்டுகளுக்குமேல் மறைக்கப்பட்டிருந்தது. கோயில் இருப்பதே வெளியில் தெரியாமல் இருந்தது.

கோயில் பக்கம் போவதற்கே மக்கள் பயந்தனர். கன்னியப்பன் என்பவர் குடும்பத்தினர் மட்டுமே தைரியமாக கோயிலினை மூடியிருந்த மரம் செடி கொடிகளை அகற்றி வழிபாடுகளை துவக்கினார். பிரதோஷ வழிபாடுகளை துவக்கினார். இக்கோயில் திருப்பணியை பலரின் உதவியுடன் செய்து முடித்து 30.06.2017ல் குடமுழுக்கு செய்வித்தார்கள்.

### வரலாற்று சிறப்புகள்

இந்த கோயிலை சீர்திருத்தம் செய்த போது கருவறை அருகே உடைந்த கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கருங்கற்பலகை கல்வெட்டு கிடைக்கப்பட்டது தற்போது அந்த கல்வெட்டு கருங்கல் பலகையை ஒரு மேடையில் வைத்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது முதலாம் குலோத்துங்கசோழனின் 24ஆட்சி ஆண்டில் கி.பி 1202கல்வெட்டாக திகழ்கிறது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர் நாட்டுக்கு உட்பட்ட மணமையான ஜகநாத நல்லூர் என்றும் இக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது ஜகநாதன் என்ற பெயர் முதலாம் ராஜராஜ சோழனுடைய சிறப்புப் பெயராகும் நம் பெருமாள் என்பவர் இக்கோயிலில் விளக்கெரிக்க மூன்று பசுகள் தந்து உள்ளார் என்று கல்வெட்டும் தகவல் குறிப்பிடப்படுகிறது சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் இத்திருக்கோயிலில் மிகச் சிறப்புடன் விளங்கியுள்ளது. இது கிழக்கு வாயில் கொண்ட தலமாகும் வாயிலில் பலி பீடமும் அடுத்து நந்தியம் பெருமான் இறைவனை நோக்கி வீற்றி ருந்து அருள்புரிகின்றார்.

### கருவறை:

கருவறையில் மூலவர் ஸ்ரீ அகத்திய பெருமான் உடைய பெருமான் கம்பீரமாக பெரிய வடிவில் அமர்ந்து கருணையுடன் திருவருள் கூட்டுகிறார் சோழர்கால சிற்பக்கலை உடைய லிங்கம் மிளிர்கின்றது. கருவறையில் அர்த்த மண்டப நுழைவு வாயில் துவாரகை விநாயகர் வலது பக்கமும் ஸ்ரீபால முருகன் இடது பக்கமும் எழுதியுள்ளனர் கருவறை தேவகோட்டங்களில் ஸ்ரீநர்த்தன கணபதி, தக்ஷிணாமூர்த்தி மகா விஷ்ணு வடக்கில் பிரம்மாவும் துர்க்கையும் அமைந்து அருள்பாளிக்கின்றனர் திருச்சுற்றின் தென்பகுதியில் சைவ சமய குறவர்கள் நால்வர் பெருமக்கள் எழுந்தருளியுள்ளனர் அதனருகில் கண்டெடுக்கப்பட்ட பலகைக் கல்வெட்டு தொன்மைக்கு ஆதாரமாக பாதுகாக்கப்பட்டு ஒரு மேடையில் பதிய வைக்கப்பட்டு உள்ளது மணமை ஊருக்கு அருகில் உள்ள குன்னத்தூர் கோயில் கல்வெட்டிலும் இக்கோவில் பற்றிய தகவல் உள்ளது

### திருநீலகண்டேஸ்வரர் சந்நிதி:

இத்திருக்கோயிலுக்கு தெற்கில் சிதிலமடைந்த ஒரு சிறிய கோயில் அழகான லிங்கத் திருமேனி புதையுண்டு கிடந்ததை கண்டெடுத்து திரு.அகத்தீஸ்வரடையார் கோயிலில் கருவறையில் இடதுபுறத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு 01.07.2018 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது











## மனோன்மணி அம்பிகை



வேலன்

தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பிகை ஸ்ரீ மனோன்மணி அம்மாள் கரங்களில் அங்குசம் பாசம் தாங்கியும் அபயகரத்துடன் அருள் பாலிக்கின்றார் மேலும் இச் சந்நிதியில் கருவறையின் விதானத்தில் தேன்சிட்டு கூடுகட்டி தினம் குருவிகள் வந்து அம்பிகையை வணங்குகின்றனர் மணோன்மணி அம்பிகை மன சங்கடங்கள் போக்குபவள் என்பது சிறப்பாகும் கிலேசங்கள் இரண்டு வகைப்படும் மனக்கிலேசம் மற்றும் காயக்கிலேசம் (உடல்) ஆகும். கிலேசம் பற்றி அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் பாடியுள்ளார். வடக்கு சுற்றில் நாகர் பிரதிஷ்டையும் வடகிழக்கில் பைரவர் எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோயிலுக்கு எதிரில் சிறுகுன்று உள்ளது. இக்குன்றில் கன்னிமார்கள் கோயிலும் சுணை ஒன்றும் உள்ளது. இக்குன்றில் உள்ள விநாயகர் கங்கை அம்மன் கோவில்களில் பக்தர்கள் வழிபடுகின்றனர். இவ்வூரின் ஏரியில் கங்கை சுணைக் கிணற்றில் எப்போதும் நீர்வற்றாதுஎன்று கூறப்படுகிறது சுணை நீர் பால் போன்று வெண்மை நிறமாக வும் மிகுந்த சுவையுடன் உள்ளது சிறப்பம்சமாகும். அகதீஸ்வரமுடையார் திருகோவில் பிரதோஷ வழிபாடு கார்த்திகை சோமவாரம். சங்காபிஷேகம் நவராத்திரி சிவராத்திரி திருவாதிரை ஆருத்ரா தரிசனம் சிறப்பு வழிபாடுகளுடன் திருமுறை ஓதுதல் போன்றவைகள் நடைபெற்று வருகின்றன.கோயிலின் சிறப்பு என்றவென்றால் மூன்று பௌர்ணமி தினங்களில் சுவாமிக்கும் அம்பிகைக்கும் அபிஷேகம் செய்து மாலை சாற்றி வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறும் தீராத நோய்களைத் தீர்த்து வைக்கும் தலமாக விளங்குகிறது மனம் சார்ந்த நோய்களும் குணமாகும். நேரம் கிடைக்கும் போது அனைவரும் வருக.. இறைவன்அருள் பெருக..

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.







அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை
தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics செல்: +91-8825844033



ஆன்மிக மாதமிருமுறை இதழ்



இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தை பார்க்கவும்
















ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
09444228203



**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**




# ஜீவராசிகளிடம் கருணை உள்ளவனாய் இரு

மிருகங்களுக்கு உதவி செய்தால் மனிதனுக்கு உதவ ஆண்டவன் தானாகவே முன் வருவான்.

❖❖❖

ஆடு, மாடுகள் வாய் திறந்து பேசாததால் அவைகளுக்கு வாயில்லை என்பார்கள். ஆனால் சாப்பிடும். எல்லா மந்திரங்களும் பலிக்கும். பக்தியின்றி அவைகளை ஜெபித்து வாயில்லா ஜீவன்களாக்காதே.

❖❖❖

மனிதனின் நடைமுறை வாழ்க்கைக்கு கடைசிவரை ஒரு உதவி தேவை. இதை நல்குவோர் மிகப் பெரிய மனிதர்களே. பாரத நாடு இராமாயணத்தையும், இராமனையும் இப்படியே பார்க்கிறது.

❖❖❖

பறவைகள், மிருகங்கள், ஜீவராசிகள் இவைகளிடம் கருணை உள்ளவனாய் இரு. பிறகே நீ உன் போன்ற மனிதனிடம் கருணை உள்ளவனாக இருப்பாய்.

❖❖❖

தனது துன்பத்தைப் போல் எவருக்கும் துன்பத்தைத் தரவேண்டாம் என்று வேண்டிக் கொண்டான் இறைவன். இயேசுவிற்குப் பின் உலகில் எவருக்குமே சிலுவையில் மரணம் ஏற்படவில்லை.

❖❖❖

கடவுளின் குரலில் கருணை இருப்பதை இந்த நிமிடம் வரை அறிந்தறிந்து வாழுகிறேன்.

முதலில் மனிதனாய் இருக்க யோசி. மனிதனாய் இரு. அதுவே போதும். மரணம், பிறவி, மறுபிறவி இவைகளைப் பற்றி யோசிக்காதே. பிறகு பார்க்கலாம். மனிதனாக ஆகாதவனுக்கு இவைகள் ஏதும் பயன்படுவதில்லை.

❖❖❖

மேகங்கள் பூமியில் மழை பெய்வதற்குக் காரணமாய் உள்ளன. மேகங்களின் தாய் வீடு பூமியே. நீர் இங்கிருந்து ஆவியாகி மேலே சென்று மேகமாவதைக் கவனி. மண்ணுலகம், விண்ணுலகம் இரண்டையும் இணைக்கும் யோகமே விசுத்தி யோகம்.

❖❖❖

பக்தி, ஞானம் இவ்வழிகளில் பாவனைக்கு, அதாவது ஒன்றைப் போல் எண்ணுவதற்கு வழி உண்டு.

❖❖❖

உனது தேகம் ஒரு பெரிய களிமண் மலை என்று கண்ணை மூடிக்கொண்டு எண்ணு. மனமென்னும் விரல்களால் நீயே அதை அமுத்தியமுத்தி குயவனைப் போன்று செய். விசுத்தியில் சுகம் ஏற்பட்டு மூதாதையரின் உருவம் தெரியும்; வந்தும் தங்கும்.

❖❖❖

அணில் பழங்களைத் தின்னும். கடவுள் பக்தி ஒன்றையே விரும்புகிறான்.

❖❖❖


உனது தேகம் ஒரு பெரிய களிமண் மலை என்று கண்ணை மூடிக்கொண்டு எண்ணு. மனமென்னும் விரல்களால் நீயே அதை அமுத்தியமுத்தி குயவனைப் போன்று செய். விசுத்தியில் சுகம் ஏற்பட்டு மூதாதையரின் உருவம் தெரியும்; வந்தும் தங்கும்.




ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மீகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# முக்தி தரும் தை பௌர்ணமி!

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தை மாதத்தில் பௌர்ணமி பிறந்தாலும் நல்ல வழி பிறக்கும் எனலாம். மகர ராசியில் பிரவேசம் செய்த சூரியன், அந்த மாதம் முழுவதும் சந்திரனோடு சூட்சம தொடர்பு கொள்வதாக கௌசிக நாடி கூறுகிறது. சூரியனோடு ஏற்படுகிற இத்தகைய தொடர்பால், சந்திர கலையில் தை மாதத்தில் நல்ல மாற்றம் ஏற்படுகிறது. இதனால் மனிதர்களுக்கு என்ன நன்மை என்று நினைப்பது தான் அனைவரின் சுபாவம்.

மனிதர்களுக்கு ஏற்படுகிற நன்மையை பற்றி பிறகு சிந்திக்கலாம். இதனால், பூமிக்கு ஏற்படும் நன்மையை முதலில் சிந்தித்தால் மனிதன் அடையும் நன்மை எத்தகையது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

நமது இந்திய தேசத்தில் குறிப்பாக, தமிழ்நாட்டில் பங்குனி மாதம் துவங்குகிற கோடைக்காலம், புரட்டாசிக்கு பின்னர் வருகிற மழைக் காலம் மார்கழி மாத குளிர் காலம் எல்லாம் முடிந்து சமமான சீதோஷ்ணநிலை, தை மாதத்தில் தான் நிலவும். இந்த நேரம் நமது தமிழ் பூமியின் மண்ணில் புதிய உயிர்கள் உற்பத்தியாகும். குறிப்பாக உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் மண்புழுக்கள் அதிகமாக உற்பத்தியாகி, நிலத்தின் நாலாபுறத்தையும் நெகிழ்ச்சியடைய செய்யும். இரசாயன கலவைகளால் விஷமாகிப் போன மண்களை கூட உணவாக எடுத்து செரித்து, நல்ல மண்ணாக மாற்றி தருவதில் மண்புழுவின் பங்கு எத்தகையது என்பது நமக்கு தெரியும்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மரங்களில் குறிப்பாக, அதன் பட்டைகளில் உள்ள உயிர்ச் சத்து சூரிய சக்தியை ஈர்த்து, வேறு பல வீரியம் மிக்க உயிர்ச் சக்திகளை உருவாக்கம் செய்கிறது. இதன் மூலம் மரங்கள், மழையை பூமிக்கு ஈர்ப்பதில் புதிய ஆற்றலை அடைகிறது.

இதுவும் தை மாதத்தில் தான் நடக்கிறது. இந்த தை மாதம் எப்படி மார்கழி மாதம் தேவர்களுக்கு சுகம் தருகிற மாதமாக இருக்கிறதோ, அதே போல மனிதர்களுக்கு சுகம் தரும் மாதமாக இது இருக்கிறது என்றால் அது மிகை இல்லை. இயற்கை வளமாக இல்லை என்றால், மனிதனின் வாழ்க்கை சூன்யமாகி விடும். மரம், செடி, கொடிகள் என்பது தனியாக சிருஷ்டிக்கப்பட்ட பொருட்கள் அல்ல. ஜீவன் என்ற வட்டத்தில் நடுநாயகமாக இருப்பது இவைகளே ஆகும். இந்த மரங்களுக்கும், மண்ணுக்கும் புதிய ஆற்றலை தை மாதம் தருகிறது. குறிப்பாக தை மாதம் முழு நிலவு அன்று சூரியனிடமிருந்து தான் பெற்ற ஆற்றலை முழுமையாக பூமிக்கு நிலா தருகிறது.




அதனால் இந்த பௌர்ணமி தனிச் சிறப்பு வாய்ந்தது என்று சொல்லலாம்.




இந்த பௌர்ணமி அன்று, மலை ஏறி மனிதன் சென்றால் அவனது சிந்தனையும் இறைவனது அருளும் ஒரு சேர சந்திக்கும் என்று, முன்னோர்கள் கூறினார்கள்.

அதனால் தான் இறைவனின் திருக்குமாரனான குமார சுவாமி கொலு வீற்றிருக்கும் பழனி மலைக்கு பக்தர்கள் காவடி எடுத்துச் செல்கிறார்கள். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பதனால், தை மாத பௌர்ணமி தைப் பூச விழாவாகவும் கொண்டாடப்பட, மலையின் மீதிருக்கும் இறைவனை துதிக்கும் வழக்கத்தை நம்மவர்கள் செய்து வருகிறார்கள்.

தைப் பூசம் என்பது முருகனுக்கு மட்டும் உகந்த நாள் அல்ல. அம்பிகையின் உச்சி திலகமாக இருக்கின்ற சந்திரன், அன்றைய தினத்தில் சூரிய சந்திரனாக பிரகாசம் அடைந்து இருப்பதனால், அம்பிகை வழிபாட்டிற்கு ஏற்ற நாளாகவும் இருக்கிறது. வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் முக்தி அடைந்ததும் தை மாத பௌர்ணமியில் அதாவது தைப் பூச தினத்தில். அதனால் தான் வடலூரில் அன்று தீப வழிபாடு சிறப்போடு நடக்கிறது.

தை மாத முழு நிலவில் தீபம் ஏற்றி மலையில் நின்று வழிபட்டால் மனக்கவலைகள் தீரும். அறிவுக்கண் திறக்கும். ஆண்டவனின் திவ்விய தரிசனத்தை பெறலாம். சுருக்கமாக கூறுவது என்றால், நமது பிறவித்தளையை களைந்து முக்தி அடையலாம் என்ற நம்பிக்கை காலங் காலமாக இருந்து வருகிறது. தைப் பூசத்தில் அம்பிகையின் அருளும், அவளது குமரனின் அருளும், பௌர்ணமி நிலாவை போல முழுமையாக கிடைக்கும்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434


ஆன்மிகமலர் மெயில் புக்

## மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ நந்திக்கு சாபம் கொடுத்த சிவபெருமான்

# உழவனுக்கு பொங்கல் நந்திக்கு மாட்டுபொங்கல்

**பொங்கல் உருவான சுவையான வரலாறு**

பொங்கல் என்பது தென்னிந்திய மக்களின் பழமை வாய்ந்த பண்டிகையாகும்; குறிப்பாக தமிழர்களின் பண்டிகையாகும். இந்த பண்டிகையின் வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நாம் சங்க காலமான கி.மு. 200 கி.மு. 300 நோக்கி செல்ல வேண்டும். பொங்கல் என்பது சமஸ்கிருத புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் திராவிட அறு வடை பண்டிகையாக அறியப்பட்டாலும் கூட, வரலாற்று அறிஞர்கள் இந்த பண்டிகையை சங்க காலத்தின் போது கொண்டாடப்பட்ட தை நீராடல் என நம்புகின்றனர்.

தை நீராடல்: சங்க காலத்தின் போது நடந்த கொண்டாட்டங்கள் தான் இன்றைய பொங்கல் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தை நீராடலின் போது சங்க கால பெண்கள் ‘பாவை நோன்பு’ என்ற விரதத்தை கடைப்பிடித்து வந்தனர். பல்லவர்களின் ஆட்சி காலத்தில் (கி.பி. 400கி.பி.800) இது மிகவும் முக்கியமான பண்டிகையாக விளங்கியது. தமிழ் மாதமான மார்கழியின் போது இது கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது நாட்டில் மழையும் வளமும் செழிக்க வேண்டி இளம் பெண்கள் வேண்டுவார்கள்.

இந்த மாதம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களை தவிர்ப்பார்கள். தங்கள் முடிக்கு எண்ணெயிட்டு கொள்ள மாட்டார்கள். மேலும் பேசும் போது கடுமையான சொல்லை பயன்படுத்த மாட்டார்கள். பெண்கள் அனைவரும் விடியற்காலையில் குளித்து விடுவார்கள். ஈர மண்ணில் செய்யப்பட்ட கட்யாயணி என்ற பெண் தெய்வத்தின் சிலையை அவர்கள் வணங்கி வந்தார்கள். தை மாதத்தின் முதல் நாள் தங்கள் நோன்பை முடித்துக் கொள்வார்கள். நெற் பயிர்கள் செழிப் பதற்காக அளவுக்கு அதிகமான மழையை கொண்டு வருவதற்காகவே இந்த நோன்பு. பழமை வாய்ந்த இந்த மரபுகளும், சடங்குகளும் தான் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு பிள்ளையார் சுழி போட்டது.

திருப்பாவை மற்றும் திருவெம்பாவை தை நீராடல் பண்டிகை பற்றியும், பாவை நோன்பின் போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் பற்றியும், ஆண்டாளின் திருப்பாவை மற்றும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவை ஆகியவற்றில் தெளி வாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. குலோத்துங்க சோழ அரசன் கோவில்களுக்கு நிலத்தை பரிசாக அளிப்பார். அதிலும் குறிப்பாக பொங்கல் பண்டிகையின் போது என திருவள்ளூர் வீரராகவா கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப் பிடப்பட்டுள்ளது.

சைவ, வைணவத்தில் பொங்கல் பற்றி இரண்டு வரலாற்று கதைகள் உள்ளது. ஒன்று சிவபெருமானுடன் தொடர்புடையது, மற்றொன்று இந்திர தேவனுடன் தொடர்புடையது. சிவபெருமான் மற்றும் நந்தி புராணத்தின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறும், அங்கே மனிதர்களிடம் தினமும் எண்ணெய் தேய்த்து குளித்து, மாதம் ஒரு முறை மட்டுமே உணவு உண்ணுமாறு கூற சொன்னார் சிவபெரு மான்.

ஆனால் நந்தியோ, தவறுதலாக, தினமும் உண்ணவும் மாத மொருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கவும் அனைவரிடமும் கூறி விட்டார். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், மனிதர்களுடன் நிலையாக பூமியில் வாழுமாறு நந்திக்கு சாபமிட்டார். அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என கூறினார்.

இதன் காரணமாகத்தான் பொங்கலுக்கு அடுத்த நாள் மனிதர்களுக்கு உதவும் நந்தி தேவருக்கு சமமான மாட்டினத்தை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மற்றுமொரு புராணக் கதையின் படி, கடவுள்களுக்கு எல்லாம் அரசனானதால் மிகவும் கர்வத்துடன் இருந்து வந்த இந்திர தேவனுக்கு பாடம் புகுத்த எண்ணினார் குழந்தை பருவத்தில் இருந்த கிருஷ்ணர். ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் இனி இந்திர தேவனை வணங்க வேண்டாம் என கூறினார். இதனால் கோபம் கொண்ட இந்திர தேவன், புயல் மழையை உண்டாக்க மேகங்களை பூமிக்கு அனுப்பினார்.

மழையும் 3 நாட்களுக்கு தொடர்ந்தது. கிருஷ்ணரோ மனிதன் இனத்தை பாதுகாக்க கோவர்த்தன மலையை கையில் தூக்கி சுமந்து கொண்டார். பின் தன் தவறையும், கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் உணர்ந்தார் இந்திர பகவான். கிருஷ்ணரிடம் மன்னிப்பு கேட்டு மக்களின் வாழ்விற்கு தேவையான நெற்பயிர் போன்றவற்றை மீண்டும் புத்துயிர் பெற்று செழிப்படைய உதவினார் இந்திரன். இதனால் இந்த தினத்தில் அறுவடை காலமாக மாறியது. இதனால் விவசாயம் செய்பவர்கள் இந்த நாளை பொங்கல் பண்டிகையாக கொண்டாட ஆரம்பித்தனர்.

பொங்கல் தினத்தன்று நெற்கதிர்களை அறுப்பதற்கு முன்பு கடவுளுக்கு விசேஷ பூஜை நடத்தப்படும். தங்களின் ஏர் கலப்பை மற்றும் நெல் அறுக்கும் அரிவாள்கள், சந்தன குப்பி ஆகியவற்றை வைத்து சூரியனையும், பூமியையும் விவசாயிகள் வணங்கிடுவார்கள். கடவுள் முன் வணங்கப்பட்ட கருவிகளை கொண்டு தான் நெற்கதிர்களை அறுவடை செய்வார்கள். நான்கு நாள் பண்டிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாளான போகிப்பொங்கல், குடும்பத்திற்கானது. இரண்டாம் நாளான சூரியப் பொங்கல் சூரிய பகவானை வழிபடுவதற்கான நாளாகும். மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல், மாடுகளை வழிபடுவதற்கான நாளாகும். இந்த நாளில் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அடர்த்தியான வர்ணம் பூசி அதன் கழுத்தை சுற்றி மாலையிடப்படும். கடவுளுக்கு படைத்த பின், அந்த பொங்கல் கால்நடை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உண்ணுவதற்கு வழங்கப்படும். நான்காம் நாளான பொங்கல் காணும் பொங்கல், குடும்ப உறுப்பினர்களும், குடும்பத்துக்கு உறுதுணையாக விளங்கும் விலங்குகளையும் மகிழ்ச்சியுடன் அரவணைத்து செல்வதற்குமான நாளாகும்.



சிவன் வசிக்கும் ஸ்தலம்,

**தேவர்கள் தினமும் பூஜை செய்வதால் மூடப்படாத கோபுர வாயில்**

குழந்தைபேறு, பில்லி சூனியம், பிரம்ம ஹத்தி தோஷ பிரச்சனை, திருமண பாக்கியத்துக்கு உகந்த

# விரிஞ்சிபுரம் மார்க்கபந்தீஸ்வரர்





www.aanmeegamalar.com

ஜாதகத்தில் குழந்தை பேறு இல்லாதவர்கள், திருமணம் நடைபெறாதவர்கள், வாகனத்தால் விபத்து, பில்லி சூனியம், பிரம்ம ஹத்தி தோஷம் பெற்றவர்கள் என்ற அனைத்து குறைகள் உள்ளவர்களுக்கு பிரம்மா, விஷ்ணு, சிவன் ஒன்றாக காட்சிபுரியும் இந்த கோவிலில் உள்ள சிம்மக்குளம் ஒரு தீர்வு.

இந்த சிம்மக்குளத் தீர்த்தத்தில் பீஜாட்சர யந்திரம் ஆதி சங்கரரால் ஸ்தாபனம் செய்யப்பட்டது. அதுதவிர உபநயனம் பெற சரியான இடமும் என்று கூறலாம்.

இந்தக்கோவிலுக்கு இராமலிங்க ஸ்வாமிகள், பட்டினத்தார், அருணகிரிநாதர் இங்கு வந்தாக கூறப்படுகிறது. சிவனின் மேல் சூரியன் பங்குனி மாதத்தில் விழுவதால் பாஸ்கர க்ஷேத்ரம் என்று அழைக்கப்படுகிறது.

தனபாலன் என்ற வணிகருக்குச் சிவபெருமான் வழித் துணையாக வந்து அருளினார். எனவே தான் இங்கு இறைவனின் பெயர் மார்கபந்து ஈஸ்வரர், வழித்துணை நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். கார்த்திகை, பங்குனி மாதங்கள் மிகவும் விசேஷம்.

## தல வரலாறு

சோழ நாட்டின் தொண்டை நாட்டில் பாலாற்றின் தென்கரையில் 1200 வருடம் முற்பட்ட உள்ளது வேலூர் இருந்து 13 கிமீ உள்ளது. இங்கு குடி கொண்டுருக்கும் ஈசன் பெரிய சுயம்பு லிங்கமாக, கொஞ்சம் சாய்ந்த வடிவில் ஸ்ரீ மார்க்கபந்தீசுவரர், மரகதாம்பிகை மற்றும் ஈசனின் துணைகொண்டு மற்ற கடவுள்களும் பெரிய உருவில் ஆகம விதிப்படி காட்சிபுரிகின்றார். இங்கு இருக்கும் பனைமரம் தலவிருச்சமாகவும் அது ஒருமாதம் கருப்பாகவும் ஒருமாதம் வெள்ளையாகவும் காய்க்கும். பாலாறு பிரம்ம மற்றும் சிம்ம தீர்த்தங்கள் உள்ளடனாகிய திருவிரிஞ்சி ஆகும். பிரம்மாவிற்கு சாப விபோசனம் பெற்ற ஸ்தலம். இத்தலத்து வடக்கு பக்க கோபுர வாயில் எப்போதும் திறந்தே இருக்கும். இதன் வழியாக தேவர்கள் தினமும் இறைவனை தரிசிக்க வருவதாக கூறப்படுகிறது. இத்தலத்து கோவிலில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள், உயரமானவை மதில் சுவர்கள், பெரிய மண்டபங்கள் இங்கு அழகாக காட்சியளிக்கின்றன.

## பிரம்மவின் சாபம்:

சிவபெருமானின் திருமுடையைக் காண பிரம்மனும் பாதத்தினைக் கண்டு வருவதாக திருமாலும் சென்ற வேளை நான்முகன் ஈசனின் முடி காண முடியாமல் ஈசனாரின் திருமுடியில் இருந்து விழுந்த தாழம்பூவை சாட்சியாகக் கொண்டு ஈசனாரின் முடி கண்டதாகக் கூறி பொய் ஒன்றைக் கூறினார். அதனால் பிரம்மா, தேவரூபத்தில் காட்சி தரக்கூடாது என்று சாபம் பெற்றார். அதற்குத் தண்டனையாக விரிஞ்சிபுரத்தில் சிவசர்மன் என்ற பெயரில் சிவநாதன் குருக்களுக்கும் நயனாநந்தினி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

அவர் தன் ஐந்தாம் வயதில் தந்தையினை இழந்தார், பூசை செய்ய உரிமையினை பறித்து விட்டனர். இதனால் கவலையுற்ற சிவசர்மனின் அன்னை நயனாநந்தினி சிவனிடம் மன்றாட வேண்டினார். சிவன் அவர் கனவில் தோன்றி திருக்கோயிலின் பிரம்ம தீர்த்தத்தில் மகனை நீராட்டிக் காத்திருக்கும் படியும் தாம் வழிகாட்டுவதாகவும் கூறினார். கனவு கண்ட மறுநாள் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஒரு முதியவர் உருவில் வந்த சிவபெருமான் சிவசர்மனுக்குப் பூணூல் அணிவித்து, பிரம்ம, சிவதீட்சை அனைத்தும் செய்து மறைந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள லிங்கம் சிவசர்மாவின் பூசைகள் செய்ய அதை ஏற்க சிவன் தலை சாய்த்ததாகக் கூறப்படுகிறது. பிரம்மாவின் வேண்டுகோளுக்கு ஏற்ப சிவன் இங்கு வாசம் செய்கிறார்கள்.

இன்றும் அங்குள்ள சத்திரத்தில் பிராமணர்கள் தங்கள் சங்கங்கள் மூலமாக முறைப்படி கடவுளின் முன்னணியில் இலவசமாக உபநயனம், பிரம்மோபதேசம் செய்கின்றனர்.

கார்த்திகை மாதம் கடைசி ஞாயிறு விசேஷம்







www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கார்த்திகை மாதம் கடை ஞாயிறு கோவிலே கோலாகலமாக இருக்கும். நான் 14ம் தேதி டிசம்பர் (கார்த்திகை 28) மாதம் 2019 சென்றேன். காரை எங்களால் உள்ளே கொண்டுபோக முடியவில்லை காலையிலே அங்கு ஒரே கூட்டம் அதிகம் கூட ஆரம்பித்துவிட்டது. எல்லா பக்தர்களும் குழந்தை பேருக்கு, திருமணம் கைகூட மற்றும் உபநயனத்திற்கு என்று விருஞ்சி புரம் வந்தார்கள். இங்கு பெரிய விநாயகருக்கு ஒரு நமஸ்கரம் செய்துவிட்டு கோவிலுக்கு சென்றோம். அனைத்து பக்தர்களும் தமிழ் நாடு தவிர வெளிமாநிலத்திருந்து, மற்றும் அமெரிக்கா, லண்டன் இந்து மக்கள் டிக்கெட் வாங்க படையெடுத்தனர். இதன் பலனாக நிறையபேர் ஈசனின் அருளால் குழந்தை பேறு பெற்றதாக கூறி சந்தோஷத்தில் உணவு தானங்களும் செய்தனர்.

என்ன பரிகாரம் என்று கேட்கறீர்களா கார்த்திகை மாத கடைசி ஞாயிறு கிழமை அன்று இங்குள்ள பன்னிரண்டு மணி பொழுதில் குழந்தை இல்லாத பெண்கள் பாலாற்றில் குளித்து பின்பு சிம்ம குளத்தில் குளிப்பது ஒரு விசேஷம். அர்த்த ஜாம பூஜை யில் கலந்து கொண்டு அங்கு சிவனின் வீட்டில் உறங்கினால் கடவுள் நல்ல தகவல் சொல்லுவார் என்பது ஐதீகம். கனவு வராதவர்கள் குழந்தை பேறு இன்னும் சிலகாலம் நீடிக்கும் என்பது உண்மை.

**ஜோதிட அலசல்:**

கால புருஷனுக்கு 5ம் வீடு பூர்வ புண்ணியத்தையும், குழந்தை பேற்றை குறிக்கும் பாவம் ஐந்தாம் பாவம் இங்கு ஆட்சி புரியும் சூரியன் ஒன்பதாம் பாவமான பாக்கிய ஸ்தானத்தை அதாவது குருவை நோக்கி செல்லும் காலமே தோஷம் பெற்ற ஜாதகர்கள் இங்குள்ள ஸ்தலத்தில் பாவங்களை போக்கி பூஜித்தால் குழந்தை பேறு மற்றும் அனைத்தும் கிட்டும். அதனால் ஞாயிறு என்பது சூரிய தேவனை குறிக்கும். அதுதவிர

கார்த்திகை மாதம் என்பது சூரியன் விருச்சிகத்தில் கடைசி பாதத்தில் இருந்து தனுசுவான குரு வீட்டிற்கு ரதத்தை செலுத்தும் காலம். ஒரு குழந்தை பிறப்பு என்பது ஆத்மகாரனும், புத்திரக்காரனும் உதவி முக்கியம் தேவை படுகிறது என்பது சூட்சம விதி. சூரியன் என்பவர் சிவன், மார்க்கபந்தீசுவரர் தந்தையாக இருந்து உபநயனம் செய்துவிப்பர் என்பது திருவிருஞ்சியில் உண்மை. சூரியன், குரு மற்றும் மற்ற தோஷங்கள் பெற்றவர்கள் இங்கு தங்கள் நட்சரத்தில் வந்து சூலி தீர்த்தம், சோம தீர்த்தத்தில் நீராடி சிவனை வழிபடுவோர் சகல நன்மைகளும் பெறுவார்கள். இதுதவிர இந்த குளம் தீராத நோய்களை தீர்த்து வைக்கும்.

விரிஞ்சிபுரம் எல்லா வகைப் பெருமைகளையும் கொண்ட ஒரு திருத்தலம். இதனைச் சமய அளவிலும், சமுதாய நோக்கிலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அருளி இருக்கிறார்கள். அனைத்து மக்களும் விரிஞ்சிபுரம் கோவில் வளர்ச்சிக்கு உங்களால் முடிந்ததை உண்டியலில் செலுத்தலாம்.

– ஜோதிட சிரோன்மணி தேவி
Whats app: 8939115647



www.aanmeegamalar.com



ஆன்மிகமலர் மெயில் புக்



# 2021-ம் வருட பௌர்ணமி தினங்கள்

அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு "திதி கொடுப்பதும், (அன்று சூரிய சந்திரர்கள் ஒரே டிகிரியில் இணைந்திருப்பார்கள்.) பௌர்ணமியன்று சிறப்பான பூஜைகள், வழிபாடுகள் செய்வதும் சிறந்தது. (அன்று சூரிய சந்திரர்கள் சம சப்தமமாக இருப்பார்கள்.) அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன், தினமும் 12 டிகிரி நகர்ந்து 15ம் நாளான பௌர்ணமி அன்று 180ம் டிகிரியை அடைகிறது; சூரியனுக்கு சம சப்தமமாகி முழுமையான ஆகர்ஷண சக்தியை (புவியீர்ப்பு) வெளிப்படுத்துகிறது. அதனால் அன்று செய்யும் பூஜைகள், வழிபாடுகள் சிறப்பைப் பெறுகின்றன.

அம்பிகை வழிபாட்டிற்கு பௌர்ணமி தினம் சிறப்பானதாக குறிப்பிடப்படும் புனித நாளாகும். அன்று அம்பாளை வழிபட்டால் குடும்பத்தில் ஒளி உண்டாகும். துன்பங்களாகிய இருள் நீங்கி நன்மை கிட்டும். பௌர்ணமி அன்று உபவாசம் இருந்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் பெறலாம் என்பது நம்பிக்கை.

பௌர்ணமி பூஜை பொதுவாக அனைவருக்கும் நன்மை செய்யக்கூடிய பூஜை என்றாலும் பெண்களுக்கு சிறப்பான பலன்களை அளிக்கக் கூடியது. திருமணமான பெண்கள் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும், திருமணமாகாத பெண்கள் திருமணப் பேறு கிட்டவும் இந்த பூஜை செய்து அம்பிகையின் அருள் பெறலாம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று அம்பிகையை பூஜித்து நல்வாழ்வு பெறலாம்.

## பௌர்ணமி ஆரம்பமும் முடிவும்

| | | | |
|---|---|---|---|
| 27.01.2021 | புதன் | இரவு | 01.45 முதல் |
| 28.01.2021 | வியாழன் | இரவு | 01.35 வரை |
| 26.02.2021 | வெள்ளி | மதியம் | 03.50 முதல் |
| 27.02.2021 | சனி | மதியம் | 2.45 வரை |
| 27.03.2021 | சனி | இரவு | 03.15 முதல் |
| 28.03.2021 | ஞாயிறு | இரவு | 01.20 வரை |
| 26.04.2021 | திங்கள் | மதியம் | 12.20 முதல் |
| 27.04.2021 | செவ்வாய் | காலை | 10.00 வரை |
| 25.05.2021 | செவ்வாய் | காலை | 10.00 முதல் |
| 26.05.2021 | புதன் | மாலை | 05.30 வரை |
| 23.06.2021 | புதன் | காலை | 03.20 முதல் |
| 24.06.2021 | வியாழன் | காலை | 12.50 வரை |
| 23.07.2021 | வெள்ளி | காலை | 10.35 முதல் |
| 24.07.2021 | சனி | காலை | 08.50 வரை |
| 21.08.2021 | சனி | மாலை | 07.20 முதல் |
| 22.08.2021 | ஞாயிறு | மாலை | 06.20 வரை |
| 19.09.2021 | ஞாயிறு | காலை | 05.20 முதல் |
| 20.09.2021 | திங்கள் | காலை | 05.50 வரை |
| 19.10.2021 | செவ்வாய் | மாலை | 07.55 முதல் |
| 20.10.2021 | புதன் | இரவு | 08.50 வரை |
| 18.11.2021 | வியாழன் | மதியம் | 01.20 முதல் |
| 19.11.2021 | வெள்ளி | மதியம் | 02.50 வரை |
| 18.12.2021 | சனி | காலை | 08.20 முதல் |
| 19.12.2021 | ஞாயிறு | காலை | 10.20 வரை |

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆன்மீக வழியில் அமைதி

9

தீராக்கோபம் போராய் முடியும் என்ப தற்கு எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் வரும் இராவணன் என்ற பாத்திரமே சான்று. காட்டில் இராமபிரானுடன் ஆரண்யத்தில் வாசம் செய்த இலட்சுமணன் என்பவனால் தன்னோட தங்கை சூர்ப்பனகையின் காது மூக்கு அறுபட்டதைக் கேள்விப்பட்டவுடன் இராவணன் மிகவும் கோபப்பட்டு, தன்னிலை மறந்தான். அவன் தங்கையின் துர்போதனையால் சீதையைக் கவர்ந்து வந்து ‘பிறர்மனை நோக்கியவன்’ என்ற தீராப்பழிக்கு ஆளானான். முடிவில் அவன் ராமபாணத்தினால் மரணத்தையே தழுவினான் என்பது புராணம் கூறும் வரலாறு. அவன் தன்னோட தங்கை **சூர்ப்பனகையிடம் பொறுமையாக கோபப்படாமல் என்ன நடந்தது என்பது பற்றி நன்கு தீர விசாரித் திருந்தால் அவன் தவறான வழிக்குச் சென்றிருக்க மாட்டான். மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய கோபம் சிந்திக்கும் திறனையே இழக்கும்படி செய்து அவன் தலைவிதியையே மாற்றிவிடும் என்பதற்கு இராவணன் அழிவு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.**

இனியவை செய்தார்க்கும், இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தல் வேண்டும் என்று நாம் ஒவ்வொருவர் மனதிலும் நினைக்க வேண்டும். மற்றவர்கள் நமக்கு அறிந்தும் அறியாமல் செய்த துன்பங்களை பொறுமையாக சகித்துக் கொள்வதோடு, அவர்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்.

பிறர் நமக்கு செய்யும் துன்பங்களைக்கண்டு நாம் கோபப்படாமல் சகிப்புத்தன்மையுடன் இருந்தால், சிலர் ‘கையாலாகாதவன்’ ‘எதிர்த்து பேசத் தெரியாதவன்’ என்று பலவிதமாக உங்கள் காதுபடவே உங்களைக் கோபப்படும்படியாக கேலியாகப் பேசி சிரிப்பார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் ஒரு பொருட்டாகவே மதிக்காமல் காதில் போட்டுக்கொள்ளாமல், பொறுமையுடன் இருந்து பழக வேண்டும். அவ்வாறு பொறுமையை கடைபிடிக்கும்போது நம்மை அறியாமல் நமக்கு மனபக்குவம் வந்து விடுகிறது. இதனைத்தான்

“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்” என்று திருவள்ளுவர் விளக்கியுள்ளார். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யக்கூடியவர்கள் உலகில் இன்பமுடன் மனஅமைதி பெற்று வாழ்வார்கள். அதனால் நமக்கு துன்பம் செய்தவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு உள்ளது.

நாத்திகவாதிகள் கடவுளை மறுத்தாலும் அறிந்தும் அறியாமல் தான தர்மங்கள் செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு புண்ணியத்தின் பலன்கள் கிடைக்கும் என்று மனதளவில் எண்ணிகொண்டு, ஏழைஎளிய மக்களுக்கு இயன்றளவில் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். ‘கடவுள் இல்லை’ என்று சொல்லக்கூடிய நாத்திகவாதிகளும் பொதுத்தொண்டுகள் பலவிதங்களில் செய்து அவர்களையும் அறியாமல் புண்ணியத்தின் பலன்களை அடைகிறார்கள் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகிறது. இதனைத்தான் ‘நான் நிந்தா துதியிலும் இருக்கிறேன்’ என்று பகவத்கீதையில் கிருஷ்ண பராமாத்மா கூறியுள்ளார்.

மனிதர்களாகப் பிறந்தவர்கள் பெரும்பாலும் மோட்சம் என்னும் வீடுபேற்றை அடைவதற்கு விரும்புகிறார்கள். மோட்சம் என்பது அழியாப் பொருள், ஒவ்வொரு மனிதனும் பராமாத்மாவை அடைவதற்கு அவனையும் அறியாமல் அவன் நாடுகிறான். யாருமே மரணம் என்னும் அழிவிற்கு செல்வதற்கு விரும்புவதில்லை. உலகில் மரணத்தைக் கண்டு பயப்படாத மனிதர்களே இல்லை. ஆனால் மனிதனுக்குள் ஏற்படக்கூடிய ஆசைகள் உலக இன்ப துன்பங்களை அடைவதற்கு மனித மனங்கள் உந்தித் தள்ளப்படுகிறது. புண்ணியங்கள் செய்து அதன்மூலம் மனிதன் மோட்சம் போன்றவற்றை அடைவதற்கு சாஸ்திரங்கள், புராணக்கதைகள் மூலம் பலவழிகளில் ஆன்மீக வழிகாட்டுகிறது.

மனிதன் மோட்சம் அடைவதற்கு ‘ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்’ என்று வடலூர் வள்ளல்பெருமான் வலியுறுத்தி, எளிமையான வழியையும் காட்டியுள்ளார். அதாவது உலகில் காணப்படும் அனைத்து உயிர்களிடத்தும் அன்புடன் இருக்க வேண்டும் என்று வேண்டியுள்ளார். இதனை நமக்கு புரியும்படியாக வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று அவர் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர் ‘எவனுடைய உள்ளம் ஏழை எளிய மக்களுக்காக கண்ணீர் வடிக்கிறதோ அவனையே நான் பராமாத்மா என்று கூறுவேன், மற்றவர்களை நான் துராத்மாவே என்றுதான் கூறுவேன்‘ என்று உபதேசம் செய்து, ஏழை எளிய மக்களுக்கு தொண்டு செய்யும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதுபோல் ஏழை மக்களுக்கு உதவுவதன் மூலம் மக்கள் மனஅமைதி அடைவதற்கு எளிமையான வழியினையும் காட்டியுள்ளார். இவற்றையெல்லாம் மனிதன் ஆன்மீகம் மூலம் அறிந்து கொள்வதோடு




ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

அதன்படி செயல்புரிய வேண்டும். அவ்வாறு ஆன்மீக வழியில் செயல் புரிந்தால் அவன் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும்.

நமது மனதில் வேண்டாத எண்ணங்களை நிரப்பி, நம்மையும் அறியாமல் நாம் துன்பங்களை வர வழைத்துக் கொள்கிறோம். நமது மனதாலும் பலவிதமான தவறுகளை நம்மையும் அறியாமல் செய்து கொண்டுதான் இருக்கிறோம். மற்ற வர்கள் வைத்திருக்கும் பணத்தின் மீதோ பொருள்களின் மீதோ மனிதன் மனதளவில் ஆசை கொள்வதும் மன தால் செய்யக்கூடிய தவறாகும். இதைத்தான் நமக்கு மற்றவர்கள் மூலம் பிரச்சினைகள் ஏதும் வரும்போது சிலர் சில நேரங்களில் 'என்னோட மனதால்கூட அவனுக்கு/அவருக்கு/அவர்களுக்கு கெடுதல் ஏதும் நினைக்கவில்லை' என்று பேச்சு வழக்கில் கூறுவதைக் கேட்டு இருக்கிறோம். நமது உள்ளத்தில் அறிந்தும் அறியாமல் ஏற்படக்கூடிய தீமையான எண்ணங்கள் எல்லாம் சுவரில் அடித்த பந்துபோல் திரும்பி வந்து நம்மை ஏதோ ஒருவிதத்தில் துன்பங்களால் தாக்குகின்றன என்பதை யாரும் உணர்வதில்லை.

நமக்கு வரக்கூடிய துன்பங்கள் துயரங்களுக்குக் காரணம் மற்றவர்கள்தான் காரணம் என்று தவறாக எண்ணிக்கொண்டு அவர்கள் மீது வீணாகப் பகைமை கொள்கிறோம். இது தவறான முடிவும் கருத்தும் ஆகும். இதனைதான் "தீதும் நன்றும் பிறர் தரா வராது." என்று ஆன்மிகம் கூறுகிறது. நாம் நம் மனதில் எப்போதும் நற்செயல்களைப் பற்றி எண்ணிக்கொண்டேயிருந்தால் வாழ்வில் நல்லது நடக்கும். மனதில் தீயவைகளைப் பற்றி எண்ணிக்கொண்டேயிருந்தால் வாழ்வில் கெட்டது நடக்கும். இதைத்தான் பெரியவர்கள் 'எண்ணம்போல் வாழ்வு' என்று தெளிவாக கூறி யிருக்கிறார்கள். எனவே நமது மனதை எப்போதும் நல்லவைகளையே எண்ணும்படி, மனதிற்கு ஆன்மீக வழியில் பயிற்சி அளிக்க வேண்டும். அவ்வாறு ஆன்மீக வழியில் தொடர்ந்து மனப்பயிற்சி பெறும்போது நாளடைவில் மனம் நல்லதையே நாடும் நிலைக்கு வந்து விடும். அதனால் நமது மனம் நமக்கு அடிமையாகி விடும். நாம் மனதில் நல்லதையே எண்ணி, நல்ல செயல்களையே செய்து, நல்லதையே பேசிகொண்டு வரும்போது மனம் அமைதி கொள்வதோடு நம் வாழ்விலும் நல்லதே நடக்கும்.


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

முதலில் நம் மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கி நம் வசமாகி விட்டால் மனஅமைதி கிடைப்பதற்கு சாத்தியமாகும். அதனால் மனிதன் நாள்தோறும் சிறிது நேரமாவது மனதை அமைதியாக வைத்துக்கொள்வதற்கு தியானம் போன்ற ஆன்மீக பயிற்சி களை மேற்கொள்ளவேண்டும், அவன் ஐம்புலன்களை சிதறவிடாமல் அதன்போக்கில் செல்லவிடாமல் நாள்தோறும் தவறாமல் தியானம் செய்து பழக வேண்டும். அப்படி தியானம் செய்து வரும்போது மனம், அறிவு, எண்ணங்கள் எல்லாம் தெளிவடைந்து ஓரளவு அமைதி கிடைக்கும். இதைத் தவிர நமக்கு அமைதி கிடைப்பதற்கு வேறு எளிமையான எந்த வழியும் இல்லை. இதனைத்தான் 'மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டாம்' என்று திருமூலர் ஆன்மீக வழியில் அமைதிக்கு வழி காட்டியுள்ளார்.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று புத்த பகவான் போதித்துள்ளார். 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசையை அறுமின்கள்' என்று திருமூலர் ஆசையை நம்மை விட்டு அகற்றும்படி எளிமையாகக் கூறியுள்ளார். மேலும் அவர் இவ்வுலக ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இறை வழிபாடு அவசியம் தேவை என்றும் விளக்கிக் கூறியுள்ளார். பிறர் கெட்டாலும், தான் மட்டும் சுகமாக வாழவேண்டும் என்ற குறுகிய சுயநலங்கூடிய எண்ணம்தான் நமது துன்பத்திற்கு ஒரு காரணமாகி விடுகிறது. மனிதர்களின் இந்த குறுகிய எண்ணங்கள்தான் சமுதாயச் சீரழிவே ஏற்படுகிறது. இத்தகைய மனநிலை ஒரு மனிதனுக்கு இருந்தால் வாழ்வில் அவனுக்கு மன அமைதி என்பது கிடைக்காது என்பதை உணர வேண்டும். எனவே மனிதர்கள் வேண்டாத குப்பைகள் போன்ற தீய எண்ணங்களை மனதில் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனதினை எப்போதும் தூய்மையுடன் வைத்துக்கொள்ள வேண்டும். நமது மனதினை தூய்மையாக வைத்துக்கொள்வது எப்படி?.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308



# திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா...

# பாடல் உருவான விதம்

கண்ணதாசன் ஆன்மீகப் பாதையில் திரும்பு முன் நாஸ்திகக் கொள்கையாளராகவும், மதங் களை விமர்சித்துக் கட்டுரை எழுதுபவராகவும் இருந்தார். ஆனால் பரமாச்சார்யார் அவரை தேவையற்ற பகுத்தறிவுவாதத்தில் இருந்து வெளிக்கொணர்ந்து, மெது மெதுவே ஆன்மீக ஞானம் பெற செய்தார்.

ஆனால் அடிப்படையில் விமர்சனம் செய் யும் போக்கானது தொடரவே செய்தது அவ ரிடம்.

கண்ணதாசன் கேட்டார், "பால் வெண்மை நிறமானது. ஆனால் பாற்கடல் ஏன் மேகவர்ணமாய் காட்டப்படுகிறது? இறைவனான ஸ்ரீவிஷ்ணுவின் நிறம், பாற்கடலில் கலந்து விட்டதா?".

ஆச்சார்யார் சிரித்துக் கொண்டே உனக்கான பதில் மதியம் கிடைக்கும் என்று கூறி கண்ண தாசனை குழப்பத்தில் ஆழ்த்தினார்.

அன்றைய தினம் மதியத்தில் உம்மிடியார்மடத் திற்கு வந்தார். கண்ணதாசனும் உம்மிடி யாரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குள் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பின் னர், உம்மிடியார் ஒரு பச்சை மரகதக்கல்லை ஆச் சார்யாரின் பாதத்தில் ஏற்றுகொள்ள வேண்டிச் சமர்ப்பித்தார்.

கல்லுக்கும் மணிக்கும் பாகுபாடு பார்க்காத ஆச்சார்யார், காரியதரிசியை அழைத்து பாத் திரத்தில் பால் கொண்டு வரப் பணித்தார். பாலில் மரகதத்தை முக்கினார் ஆச்சார்யார்.

நகைத் தொழிலில், கல்லின் தரத்தைச் சோதிக்கப்படும் முறை அது. உம்மிடியாரோ திகைத்துப் போனார். தன் குணத்தின் பேரில் சந்தேகமா இல்லை மரகதத்தின் பெயரில் சந்தேகமா என்று உம்மிடி யார் குழம்பிப் போனார்.

ஆச்சார்யார் பொறுமையாக கண்ணதாசனை அழைத்துப் பாலைக் காட்டினார். வெளிர்பச்சை வர்ணத்தில் பால் மாறிப்போய் இருந்தது.

வாயடைத்துப் போன கண்ணதாசனிடம் ஆச்ச ார்யார் விளக்கலானார். மரகதத்தால் பால் எப்படி பச்சை வர்ணம் பெற்றதோ அதைப் போலவே ஸ்ரீமந் நாராயணனை ஏந்திக் கொண்டிருக்கும் பாற்கடலும், அவனது வர்ணத்தைப் பெறுகிறது. அதனாலேயே மேகவர்ணமாய் இருக்கிறது என்று விளக்கினார்.

கண்ணில் நீர்பெருக்கெடுத்த கண்ணதாசன், இந்த நிகழ்விற்குப் பின்தான் "திருப்பாற்கடலில் பள்ளிகொண்டாயே ஸ்ரீமந் நாராயணா" என்ற அற்புதப் பாடலை இயற்றினார்.

உம்மிடியாரிடம் இந்த மரகதத்தை காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு மகுடம் செய்து அதில் பதிக்கும்படி கேட்டுக் கொண்டார். தன் மீது சந்தேகம் கொண்டு அவமானப் படுத்தப்பட்டு விட்டதாய் தவறாக நினைத் தமைக்கு மன்னிக்கு மாறு வேண்டிக் கொண்டார் உம்மி டியார்.

கல்லின் தன்மையைச் சோதிக்க அல்ல, அடியார் களின் அறியாமையைப் போக்கவே என்று புரிந்து கொண்டார்.



Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 09444228203.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020

# ஆன்மிகமலர்.காம்

## இணையதளத்தின் சார்பில் வெளிவரும்

ஆன்மிகமலர் மெயில்புக் வாசகர்களுக்காக துவக்கப்பட்ட

ஆன்மிகமலர்

YouTube சேனலை




செய்து




தொடர்ந்து நமது YouTube சேனலுக்கு ஆதரவு தாருங்கள்